விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 08 சனிக்கிழமை (21.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092




# புத்தாண்டுக்கு முன்னர் புலிகளை தோற்கடிக்க இந்திய அரசு பணிப்பு

## தமிழகத்தில் தகவல் கசிவு

(சென்னை)

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 16ஆம் திகதி முதல் மே 13ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதிக்கு முன்னர் தோல்வியடையச் செய்யுமாறு இலங்கை அரசுக்கு காங்கிரஸ் கட்சி கூறியுள்ளதாக, காங்கிரஸ் கட்சியின் நம்பகமான உள்ளக வட்டாரங்கள் மூலம் தமிழ் நாட்டில் தகவல் கசிந்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 48ஆயிரம் பொதுமக்கள் வருகை

(கொழும்பு)

விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு 48ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருகைதந்துள்ளதாக இடர்முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதிகமான பொதுமக்கள் வந்து கொண்டிருப்பதாக குறிப்பட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க எதிர்வரும் தினங்களில் இதைவிட அதிகமானோர் வருகை தருவதாக எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

இந்தமக்கள் சுதந்திரமாக வரவில்லை எனவும் விடுதலைப்புலிகளிடமிருந்து தப்பி உயிர்களைத் தியாகம் செய்த வண்ணமாகவே வருகின்றார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இதேவேளை விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து வருகைதந்த 131 பொது மக்கள் கடற் படையினரால்நேற்று முன்தினம் மீட்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## உள்நாட்டு விவகாரம் எனத் தெரிவித்து இலங்கை விடயத்தை எதிர்க்காதீர்!

### சீனாவிடம் புலிகள் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் எதிர்வரும் 26ஆம் திகதிய கூட்டத்தில் இலங்கை விவகாரத்தை ஆராய்வதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ள நிலையில், இவ்விடயத்தில் இடையூறு விளைவிக்க வேண்டாம் என விடுதலைப் புலிகள், சீன அரசாங்கத்திற்கு நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக் கிழமை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை அரசானது தனது இனப்படுகொலைகளை மூடி மறைக்க இது (12ஆம் பக்கம் பார்க்க)

## பதுளையில் தேடுதல் 11 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பதுளை மாவட்டம் பசறையில் நடைபெற்ற சுற்றி வளைப்பு சோதனை, தேடுதல் நடவடிக்கையில் 11 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பதுளை (12ஆம் பக்கம் பார்க்க)

## சி.சு.க. அலுவலகம் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்பிலுள்ள வாகனேரிப் பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முகாம் மீது தாக்குதல்நடத்தப்பட்டுள்ளது. இதில் முரளிதரன் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனேரியிலுள்ள குளத்துமேடு பகுதியில் சுதந்திரக் கட்சி அலுவலகம் அமைந்துள்ளது. இம்முகாம் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் யோசனையை முன்வைத்து இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும்

### அவுஸ்திரேலியா வலியுறுத்தல்

(சிட்னி)

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் யோசனைகளை முன் வைத்து நாட்டின் மனிதாபிமான பிரச்சினையை தீர்க்க வேண்டும் என அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை கோரியுள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டிபன் ஸ்மித் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தம்மால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான தடைகளை நீக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்க வேண்டும் எனவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## கரு ஜெயசூரியவுக்கு ஐ.தே.க. தலைவர் பதவி?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை தற்போது பிரதித் தலைவராக இருக்கும் கரு ஜயசூரியவுக்கு வழங்கி, தலைமைப் பதவியிலிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் சிரேஷ்ட தலைவர் என்ற பதவியை வழங்குவதற்கான யோசனையொன்று எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு சார்பாக ஐ.நா.சபை செயற்படுகின்றது

### இன்னர் சிற்றி ஊடகம் தகவல்

(லண்டன்)

வன்னியில் கொல்லப்பட்டவர்களின் உடலங்கள் கணக்கிடப்படவில்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்த போதும் கடந்த ஜனவரி 20ஆம் நாளில் இருந்து மார்ச் 7ஆம் நாள் வரையில் அங்கு கொல்லப்பட்ட, காயமடைந்த மக்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 924 என (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளன் பகுதியிலிருந்து 460 பேர் திருமலை சென்றனர்

(கொழும்பு)

முல்லைத்தீவு புதுமாத்தளன் பிரதேசத்திலிருந்து காயமடைந்த பொதுமக்களில் மற்றுமொரு தொகுதியினர் கப்பல் மூலம் நேற்று புல்மோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த கப்பலில் 460 பேர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மருத்துவ சேவையினை புல்மோட்டையில் தங்கியுள்ள இந்திய மருத்துவக் குழுவினர் மேற் கொள்ளவுள்ளனர். கடந்த 11 தடவைகளாக 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திருமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச–5)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

## வன்னியில் இடம்பெற்ற தாக்குதல்களில் நேற்றும் 49 பொதுமக்கள் உயிரிழப்பு

(வவுனியா)

வன்னியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் 49 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 47 பேர் காயமடைந்துள்ளனர்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் நேற்றுச் சென்றபோது அதற்கு அருகாக ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார், ஆர்.பி.ஜி., பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான அம்பலவன் பொக்கணை, மாத்தளன், முள்ளிவாய்க்கால் மற்றும் இடைக்காடு பகுதிகளை நோக்கி இந்த (02ஆம் பக்கம் பார்க்க)



வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிலையத்தை வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஞானசோதி திறந்து வைப்பதையும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நினைவுக் கல்லை திறந்து வைப்பதையும் மற்றும் பெயர் பலகை திறந்துவைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் எழுச்சிவிழாவின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று மாலை 3.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் குருநகர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நிக்கிலஸ் அணி மோதவுள்ளது.

(சு)

# வன்னியில் இடம்பெற்ற...

தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில், இ.கோபிகிருஷ்ணா (வயது 27), அன்னலட்சுமி (வயது 36), செ.செந்தூரன் (வயது 9),ஆ.சிறீபரன் (வயது 60), இ.கோபி (வயது 23), க.திலகேஸ்வரி (வயது 13), அ.தருமராசா (வயது 67), சி.கோபிகன் (வயது 16), ர.பிரசாந்த் (வயது 4), இ.பரமேஸ்வரி (வயது 48), சு.நிரோஜினி (வயது 10), ஜெ.தர்சிகா (வயது 9), இ.தினேஸ்குமார்(வயது 16), வை.லலிதாமணி (வயது 24),

ல.சத்தியபாமா (வயது 15), அ.புஸ்பராசா (வயது 29), இ.ஜோர்ஜ் (வயது 78), வ.சோமு (வயது 60), சு.சுரேகா (வயது 20), க.தேவிகாயினி (வயது 10), வே.மடுத்தீன் (வயது 62), நீ.மணிவண்ணன்(வயது 27), த.ஜெயக்குமார் (வயது 35), தி.ரவீந்திரன்(வயது 16), வ.நடராசா (வயது 77), வ.புவனேஸ்வரி (வயது 38), பி.இந்திரன் (வயது 37), ந.யோகமலர் (வயது 55), அ.நாகேஸ்வரி (வயது 70), து.யோகமலர்(வயது 1), து.சுரேகா (வயது 26), து.சுரேஸ்குமார் (வயது 26) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இதில் 2 பேர் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முல்லைத்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இரண்டு கடற்றொழிலாளர்களை கடற்படையினர் தடுத்து வைத்திருப்பதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

சிலாவத்தையிலிருந்து இடம்பெயர்ந்து பொக்கணையில் வசித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுரேஸ் மற்றும் அவருடன் சென்றவரும் கடந்த 18ஆம் திகதி கடலில் காணாமல் போயிருந்தனர். இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்திடம் உறவினர்கள் முறையிட்டுள் ளனர்.

இவர்கள் இருவரும் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ் சிலுவைச்சங்கக் குழு நேற்று அறிவித்துள்ளது.

(சு-5)

# எஸ்.எல்.ஏ.எஸ். பயிற்சி வகுப்பு

இலங்கை நிர்வாக சேவைக்கான பயிற்சி வகுப்புக்கள் இன்று காலை 8.30 மணி தொடக்கம் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன் பெறலாம் என ஆசிரியர் க.தெய்வேந்திரன் அறிவித் துள்ளார். (சு-14)

# பருத்தித்துறை லீக் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இன்ரலீக் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை லீக் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாண லீக் அணியுடன் நடைபெற்ற இப் போட்டியின் இறுதிவரை இரு அணிகளும் கோல் எதனையும் போட வில்லை.

இதனையடுத்து தண்டனை உதைவழங்கப்பட்டது. இதில் பருத்தித்துறை லீக் அணி 5:4 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

(சு)

# தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம்

இடம் பெயர்ந்து யாழ். கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஜனவரி மாதத்திற்குரிய சம்பளம் வழங்கப்பட இருப்பதால் மேற்படி ஆசிரியர்கள் எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப்பட்டியலில் கையொப்ப மிட்டு வங்கியூடாக பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித் துள்ளார்.

(சு)

# நேத்ரா தொலைக்காட்சியில் கிரிக்கெட் பயிற்சி ஒளிபரப்பு

யாழ். பாடசாலைகளின் கிரிக்கெட் வீரர்களுக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வாவினால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி தொடர்பான ஒளிபரப்பு எதிர்வரும் 24ஆம் திகதி இரவு 10 மணிக்கு நேத்திரா தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலய இணைப்பாளர் அருணசிறி தெரிவித்துள்ளார். (சு-5)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவ ஒரு இலட்சம் ரூபாய் அன்பளிப்பு



வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் அத்தியாவசிய தேவை களுக்கு உதவும் பொருட்டு வடமராட்சி ஸ்ரீ வல் லிபுர ஆழ்வார் தேவஸ்தான பரிபால சபையினரால் ஒரு இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது .

இந் நிதியுதவியினை வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான முகாமைத்துவ தர்மகர்த்தா இ.அன்னலிங்கம் யாழ்.அரச அதிபர் க.கணே ஷிடம் கையளித்தார். (சு)

We Serve

இலவச மருத்துவ முகாம்

இடம்: குருநகர் கலாசார மண்டபம்

காலம்: 22.03.2009 ஞாயிறு

நேரம்: காலை 8.00 மணி

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம், யாழ். ப.நோ.கூ.ச. சமாசத் தலைவரும் எமது கழக அங்கத்தவருமாகிய **லயன் P.கிரிதரன்** அவர்களின் அனுசரணையுடன் நடாத்தும் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாமில் கலந்து பயன் பெறுமாறு குருநகர் மற்றும் குருநகரை அண்மித்த அனைத்து மக்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம் (2415)

SAMPANTHAR MODERN HEALTH CARE HOSPITAL

☺ காலை,மாலை மருந்து எடுத்தல் OPD (யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்)

☺ வாட்டில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களை வைத்திய நிபுணர்கள் பார்வையிடுவர்.

☺ கண்,காது,மூக்கு,தொண்டை,பொதுவைத்தியம், சத்திர சிகிச்சைகள், என்புமுறிவு, குழந்தை, பெண் நோயியல், வைத்திய நிபுணர்களின் சேவை.

☺ ECG, U.SCAN, MEDICAL LABORATORY

50, நாவலர் வீதி (மனோகரா தியேட்டர் அருகே)
யாழ்ப்பாணம். T.P. 222 2528, 4188 (C-2199)

தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் கலீசன் என்பவருடைய தே.அ.அ. இலக்கம் 901381100V கடந்த 19.03.2009 அன்று சுன்னாகத்திற்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ந.தர்மகுலசிங்கம், அம்மன் வீதி,உரும்பிராய் மேற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

T.P. - 0774272359 (2416)

வேலை வாய்ப்பு

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

✪ வாகனத் திருத்துனர்

✪ நீர் இறைக்கும் இயந்திர திருத்துனர்

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை 25.03.2009 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரியில் நேரடியாக ஒப்படைக்கவும்.

யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

20.03.2009 (C-2215)

# இன்று ஒரு தகவல்

## நட்புறவு

இங்கிலாந்தில் ஒரு இளைஞன் இருந்தான். அவனது பெயர் ஜோன்.

ஜேர்மனியில் மிஸ் மேரி என்று ஒரு பெண் இருந்தாள்.

இந்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதேயில்லை. ஆனால் நண்பர்கள். பேனா நண்பர்கள்.

ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்வது... அவ்வளவு தான். பல ஆண்டுகள் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் மேரி எப்படி இருப்பாள் என்று பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் ஜோன் மேரிக்கு ஒரு கடிதம் எழுதினான்.

'உன்னுடைய புகைப்படம் ஒன்று அனுப்பிவை' என்று எழுதினான்.

மேரியிடமிருந்து பதில் வந்தது. ஆனால் புகைப்படம் வரவில்லை. ஏதோ காரணம் சொல்லி புகைப்படம் அனுப்பவில்லை.

இதற்கிடையில் உலகப் போர் ஆரம்பமானது. அதனால் கடிதப் போக்குவரத்தும் நின்று விட்டது. ஒருவருக்கொருவர் என்ன ஆனார்களோ என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

உலகப் போர் ஒருவழியாக முடிந்தது. அதன்பின் இந்த இளைஞன் ஜேர்மனிக்குப் போகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆர்வத்தோடு சென்றான். மேரி எப்படி இருக்கிறாளோ... என்ன ஆனாளோ... என்று தெரியவில்லை. முகவரி மட்டும் கையில் இருந்தது.

அதை வைத்துக் கொண்டு அந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து போய்ச் சேர்ந்தான்.

அங்கே போய்ப் பார்த்தால்... மேரியின் வீடு இடிந்து கிடந்தது. குண்டு வீச்சினால் சிதைந்து போன அந்த வீட்டில் யாருமே இல்லை.

அக்கம் பக்கம் விசாரித்தான்.

அவர்கள் தான் விபரம் சொன்னார்கள்.

மேரி இறந்து விட்டாராம். மேரிக்கு 80 வயதாம்! மேரி 80 வயது மூதாட்டி. அவர் இறப்பதற்கு முன் பேனா நண்பர் ஜோன் படிப்பதற்காக ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவர் என்ன எழுதியிருந்தார் தெரியுமா?

"என் இனிய நண்பரே! நான் ஏன் புகைப்படம் அனுப்பவில்லை என்பது இப்பொழுது புரிந்ததா? ஒரு வேளை நான் அனுப்பியிருந்தால் உங்கள் இளமைக் கனவுகளையெல்லாம் எனக்கு எழுதியிருக்கமாட்டீர்கள். நானும் அதையெல்லாம் படித்து ரசித்திருக்கமாட்டேன். நன்றி நண்பரே" என்று எழுதியிருந்தாராம்.

இது உண்மையாக நடந்த ஒரு சம்பவம்.

நட்பு பலவகை. அதில் இது ஒரு வகை.

பாடசாலை நட்பு, அலுவலக நட்பு, பேனா நட்பு, பயண நட்பு என்று பலவகை நட்புகள் உலகத்தில் உண்டு.

நட்பென்பது வேறு, உறவென்பது வேறு! நண்பர்கள் அறிமுகமாகுபவர்கள்!

உறவினர்கள் உடன்பிறப்பால் – திருமணத்தால் நம்மோடு சம்பந்தப்படுபவர்கள். நட்பு துண்டிக்கப்படலாம். உறவு ஒட்டிக்கொண்டு தான் இருக்கும்.

இவன் நேற்று வரைக்கும் எனக்கு நண்பனாக இருந்தான். இன்றைக்கு விரோதியாகி விட்டான் என்று சொல்லலாம். இவர் நேற்று வரைக்கும் எனக்கு சித்தப்பாவாக இருந்தார். இன்றிலிருந்து வேறு ஆளாகிவிட்டார் என்று சொல்லமுடியாது.

உண்மையான நட்பு – உறவு மாதிரி ஆக வேண்டும். அதுதான் நட்புறவு. அது எப்படி இருக்க வேண்டும் என்ற வள்ளுவர் சொல்கிறார்.

"உடுக்கை இழந்தவர் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்கிறார்.

இந்தக் காலத்தில் எல்லாம் எத்தனையோ விதமான நட்புறவுகள். இரண்டு பேர் முதலில் பேனா நண்பர்களாக இருந்தார்கள். பின் நேரில் சந்தித்தார்கள்.

நட்பு நட்புறவு ஆனது. அந்த இருவரில் ஒருவன் சொன்னான்.

"இவனை என் கூடப் பிறந்த சகோதரனாகவே வைத்துக் கொண்டேன் சேர். அதுதான் இப்பொழுது இடைஞ்சலாகி விட்டது" என்றான்.

"எப்படி?" என்று கேட்டேன்.

"இப்பொழுது அவன் என் சொத்தில் பாதிப்பங்கு கேட்கிறான் சேர்" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வன்னியில் மோதல் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

இலங்கையின் வடக்கே மோதல்களில் சிக்கியுள்ள மக்களிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் முகமாக செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஐரோப்பிய ஒன்றியம் 3 மில்லியன் யூரோக்களை உதவித் தொகையாக வழங்கியுள்ளது.

இலங்கையின் வடக்கே மோதல் இடம்பெறும் பகுதிகளில் பாரிய மனிதாபிமான அவலம் நிலவுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மோதல் பிரதேசங்களில் சிக்கி நாளாந்தம் உயிரிழந்த வண்ணமுள்ளனர்.

எறிகணை தாக்குதல்களால் மட்டும் அவர்கள் உயிரிழக்கவில்லை. போதிய உணவு, நீர் இன்றியும், மருத்துவ உதவியின்றியும் உயிரிழக்கின்றனர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி தொடர்பான ஆணையாளர் லூயிஸ் மைக்கேல் தெரிவித்துள்ளார்.

மோதல் பிரதேசங்களில் சிறிய அளவு மனிதாபிமான உதவிகளே அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அம்மக்களை பாதுகாக்கவும், மனித அவலங்களை தடுக்கவும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் மோதல் பிரதேசத்தில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாக்க எறிகணை தாக்குதல்களை நிறுத்த வேண்டும், அத்துடன் மனிதாபிமான உதவிகளையும், போது மான உணவு, மருந்துகளையும் அம்மக்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் லூயிஸ் மைக்கேல் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார். (ஓ-5)

# தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான போட்டிப் பரீட்சை

தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான போட்டிப் பரீட்சை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தேசிய கல்வியிற் கல்லூரியில் ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் ஆகிய தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தோருக்கான ஆங்கில பாடம் மற்றும் கணித பாடப் பரீட்சைகள் இன்று நடைபெறவுள்ளன.

இக்கற்கை நெறிக்கான மாணவர் அனுமதி, இப்பரீட்சை பெறு பேறுகளிலிருந்தே வழங்கப்படும். Z வெட்டுப்புள்ளி இதன்போது கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. (ஓ-5)

# 885 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக மன்னாருக்கு அழைத்து வரப்பட்டனர்

திருகோணமலை வைத்தியசாலையில் இருந்து மேலும் 885 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அவசர உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றது. வன்னியில் இடம்பெற்று வரும் மோதல் காரணமாக திருகோணமலை மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் மேலதிக சிகிச்சைகளுக்காக இதுவரை ஆயிரத்து 74 பேர் மன்னார் பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

# தடுப்பூசி ஒவ்வாமையால் சிறுமியொருவர் மரணம்

மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாடசாலை மாணவியருள் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் வழங்கப்பட்ட ருபெல்லா தடுப்பூசியால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக பாடசாலை மாணவியர் பலர் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை காரணமாக அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களுள் 26 மாணவியர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)



புத்தூர் புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். கல்வி வலயத்தின் பொறியியலாளர் எஸ். சிவபாலன் மங்கள விளக்கேற்றுவதையும், வித்தியால அதிபர் கு. ரவிச்சந்தரன் மற்றும் விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் - மருதங்கேணி நிருபர்)

# இராசி பலன்

*21.03.2009*
*(பங்குனி 8, சனிக்கிழமை)*
*தசமி மாலை 5.46 மணிவரை*
*உத்தராடம் முன்னிரவு 11.33 மணிவரை*
*இராகுகாலம் 9.17 - 10.47 மணிவரை*
*சுபநேரம் 3.17-4.47 மணிவரை*
*வண்ணை வைத்தீஸ்வரர் கொடியேற்றம்*
*நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கொடி*

| | |
|---|---|
| மேடம் | தொழில் மேன்மை, அதிகாரம், தூரதேசச் செய்தி, காரிய அனுகூலம். |
| இடபம் | புதிய திட்டமிடல், முயற்சி கைகூடும், தேவையற்ற அச்சம், திடீர் பயணம். |
| மிதுனம் | வீண்தொல்லை, காரிய தடங்கல், பணக்குறைவு, நிலை மாற்றம். |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, பண வருவாய், காரிய அனுகூலம், பயணம். |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், பொருள் சேர்க்கை, செல்வாக்கு. |
| கன்னி | வியாபார விருத்தி, பூர்வ புண்ணிய கருமம், முயற்சி தாமதம், தனவிரயம். |
| துலாம் | பயந்த சுபாவம், தாய்வழி உறவு, ரோக நிலை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | வாக்கு மேன்மை, சகோதரர் உதவி, பிரயாண நன்மை, நன்மதிப்பு. |
| தனுசு | குடும்ப நன்மை, தொழில் அபிவிருத்தி, தனவிரயம், முயற்சி தாமதம். |
| மகரம் | பெரியோர் உதவி, முயற்சி கைகூடும், சிந்தனை மிகுதி, போசன சுகம். |
| கும்பம் | திடீர் பயணம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், வாக்கு மேன்மை. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல், போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 30 | 40 |
| அவரை | 20 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 15 | 30 |
| கரட் | 60 | 50 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 25 | 35 |
| பெரிய வெங்காயம் | 35 | 40-50 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 50 | -- |
| பயிற்றங்காய் | 40 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 |
| போஞ்சி | 70 | 80 |
| கீரை – 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35 |

## மஹோற்சவம்

(இணுவில்)

இணுவையம்பதி சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் ஏப்ரல் மாதம் 2ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சமும், 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7மணிக்கு சப்பறமும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

இதில் காவடி எடுக்கும் அடியார்கள் வசந்த மண்டப பூசை ஆரம்பிப்பதற்கு முன்பதாக ஆலயத்திற்கு காவடி கொண்டு வருதல் வேண்டும் என ஆதீனகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## நாவலடி நலன்புரி நிலையத்தில் விசேட விற்பனை நிலையம்

(யாழ்ப்பாணம்)

நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதி கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம் நாவலடியில் ஒரு கோப்சிற்றியின் விசேட விற்பனை நிலையம் ஒன்றினைத் திறந்து வைத்துள்ளது.

போர்ச் சூழல் காரணமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள பல குடும்பங்கள் கொடிகாமம், நாவலடி நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

இவ் விற்பனை நிலையம் மூலம் சகல அத்தியாவசியப் பொருட்களும் நியாய விலையில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கே விநியோகிக்கப்படுகின்றது என சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ். தேவகுமார் தெரிவித்தார். (ஓ-5)

## அழகியற் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலைக்குட்பட்ட க.பொ.த.சாதாரணம், க.பொ.த.உயர்தரம் ஆகிய மாணவர்களுக்கிடையே அழகியற் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் ஏப்ரல் 3 ஆம் திகதிக்கு முன்னதாக நடாத்தப்பட்டு கோட்ட மட்டத் தெரிவுக்காக மாணவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-7)

## சான்றிதழ் வழங்கல்

நெக்கோட் செயற்திட்ட கணனி பயிற்சி நெறியில் மென்பொருள் ஆக்கப் போட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண நிக்கொட் திட்டப் பணிப்பாளர் த.இலங்காநேசன் கலந்து சிறப்பிப்பதுடன் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

### யாழ் குடாநாட்டில்

## 24 மணித்தியாலமும் மின்சாரம் வழங்குவதில் சிக்கல் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு 24 மணித்தியாலமும் மின்சாரம் வழங்குவதில் மேலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக மின்சாரசபை அறிவித்துள்ளது.

யாழ். குடாவிற்கு தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கு நொதேன் பவர் நிறுவனம் சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து 2007 ஆம் ஆண்டு 6 மின் பிறப் பாக்கிகளை கொண்டு வந்துள்ளது.

ஒப்பந்த காலத்தின்படி 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ். குடாவிற்கு 24 மணித்தியால மின்சாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

சீன நிறுவனத்தினால் கொண்டு வரப்பட்ட 6 மின்பிறப்பாக்கிகளில் 3 மட்டுமே தொழிற்படக்கூடிய நிலையில் வந்து சேர்ந்துள்ளதாகவும் ஏனையவை தொழிற்பட முடியாத நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்படக்கூடிய இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை மின்சாரசபை அதிகாரிகள், அமைச்சர்கள் அடங்கலாக அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு 24 மணித்தியால மின்சாரம் இன்னும் இரண்டு மாதத்தில், மூன்று மாதத்தில் வழங்கப்பட்டுவிடும் என தொடர்ச்சியாக ஊடகங்களுக்கு அறிவித்தல்கள் மட்டுமே விடுக்கப்பட்டு வந்துள்ளனர்.

வழங்கப்பட்ட மின்சாரம் காலையிலும் மாலையிலும் துண்டிக்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இறுதியாக 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 மணித்தியாலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரையிலும் வழங்கப்படவில்லை.

சீன நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 6 இயந்திரங்களில் 3 இயந்திரங்கள் இயங்கக்கூடிய நிலையில் இருந்தபோதும் தற்போது இரண்டு இயந்திரங்கள் மாத்திரமே இயங்கக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு 24 மணித்தியால மின்சாரம் என்பது வெறும் வார்த்தை மட்டும் தானா என்றும் தற்போதைய இரவு மற்றும் காலை நேர மின்வெட்டுக்கள் பற்றியும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஓ-5)

## சேவைநலன் பாராட்டுவிழா

எக்ஸ்போ செயற்திட்ட கணனி பயிற்சி நெறியின் மென்பொருள் ஆக்கப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.புலோலி மெ.மி.த.க.பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண நிக்கொட் திட்டப் பணிப்பாளர் த.இலங்காநேசன் கலந்து சிறப்பிப்பதுடன் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(ஓ-4-19)




## மெய்வல்லுநர் போட்டி


வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவிற்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி சீலா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக எக்ஸ்போ ஏயார் நிறுவனத்தின் யாழ். முகாமையாளர் கு. வசீகரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக திருமதி சுபத்திரா வசீகரன் வெற்றியீட்டிய மாணர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4-19)

## ஞாயிறு திருப்பலி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை புனித - அந்தோனியார் ஆலயத்தில் நாளை காலை 6.30 மணிக்கு ஞாயிறு திருப்பலி நடைபெறவுள்ளது என அருட்தந்தை றொபின்சன் அடிகள் தெரிவித்துள்ளார். (ஓ-72)





தென்மராட்சி கணிதவள நிலையத்தினரால் க.பொ.த சா/த மாணவர்களது கணித பாட அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் வெளியிடப்பட்ட "சுயகற்றல் கையேட்டை" சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாணவி ஒருவருக்கு வழங்கி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும், சாவ. மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிவத்திரை சிவநாதன் உரையாற்றுவதையும், உபஅதிபர் திருமதி ரு.இராசரத்தினம், தென்மரட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கணித வள நிலைய முகாமையாளர் சி.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

## முறைசாரா கல்வி பிரிவின் இலவச பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் யாழ்.மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இலவசமாக துணி அச்சுப் பதித்தல், சேலை அலங்காரம் ஆகியவற்றுடன் அலங்கார உற்பதிப் பொருட்களுக்கான கைவினைப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர் இப் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளலாம்.

இதில் கலந்துகொள்ள விரும்புவோர் இம் மாத முடிவிற்குள் விண்ணப்பங்களை பாடசாலையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.வாரத்தில் 3 தினங்கள் பாடசாலை முடிந்ததும் இப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று வித்தியாலய அதிபர் ம.கஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஓ)

## போட்டி நிரல் தயாரிப்பு

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான எல்லே, கரம்,கபடி, போட்டி நிரல் தயாரிப்பு நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. ஆதலால் பங்குபற்றும் பாடசாலைகள் தவறாது வருகைதருமாறும், ஏற்கனவே பதிவுசெய்த பாடசாலைகள் போட்டி நிரலில் சேர்க்கப்படும் என்றும் உதவிக் கல்விப் பணிப்பார் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார். (ஓ)

## கண் பரிசோதனை முகாமும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கலும்

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினால் கண்பரிசோதன்ன முகாமும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சுதுமலை வாழ் மக்களை கலந்துகொண்டு பயன்பெறுமாறு மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர். (ஓ-6)

## வழுக்கையாறு அபிவிருத்தித் திட்டத்தின் 2 ஆம் கட்ட வேலைகள் ஆரம்பமாகவுள்ளன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய அபிவிருத்தித் திட்டமான வழுக்கையாறு அபிவிருத்தித் திட்டத்தின் 2 ஆம் கட்ட வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்பொழுது வேலைத் திட்டத்திற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் தலைமையில் யாழ்.நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகூத்தர்கள் அடங்கிய குழுவினர் மதிப்பீட்டு வேலையில் ஈடுபட்டனர்.

சங்கரத்தையில் உள்ள முதலியார் குளத்தில் இருந்து தெல்லிப்பளை பிரதேசத்திலுள்ள வினாக்காகுளம் வரையிலான வழுக்கையாறின் பிரதான வாய்க்கால் மற்றும் வாய்க்காலுடன் அண்டிய சிறுகுளங்கள், இணை வாய்க்கால்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீடுகள் நடைபெறுகின்றன.

வழுக்கையாறுத் திட்டத்தின் அபிவிருத்தி வேலைக்கு ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட 250 மில்லியன் ரூபா பின்னர் 200 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டு கடந்த வருடம் சுமார் 40 மில்லியன் ரூபாவிற்கான வேலைகள் முடிவடைந்துள்ளன. 15 கிலோ மீற்றர் நீளமான இந்த வாய்க்கால் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு போதாமல் இருப்பதாக யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசத் தலைவர் க.முதலியார் ,சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அறிவித்துள்ளார். (ஓ-5)

## விழிப்புணர்வுக் கண்காட்சி போட்டி

நல்லூர் பிரதேச செயலகத்தினால் உலக வனதினம் (மார்ச் 21), உலக நீர் தினம் (மார்ச் 22), உலக வானிலை தினம் (மார்ச 23) ஆகிய தினங்களை முன்னிட்டு, நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விழிப்புணர்வுக் கண்காட்சிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டிக்கான ஆக்கங்களையும் படைப்புக்களினையும் ஏப்ரல் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நல்லூர் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கமுடியும் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஓ)

# இலங்கையில் தமிழர் 101

### ஹெளவரும் தமிழரும்
**உறுதிப்பற்ற இனக்குழுக்கள்**
**900-1070**

**இலங்கையில் சோழர் ஆதிக்கப்படர்ச்சி**

சோழப் பேரரசர் ஆட்சியின்போது தென்னிந்தியாவில் காணப்பட்ட மேற்கூறிய முன்னேற்றங்கள் அனைத்தும் இலங்கையில் நேரடி விளைவுகளை உண்டுபண்ணி, இறுதியில் இலங்கையில் தமிழர் இனக் குழுவின் வலுவைப் பெருக்க உதவின. இலங்கையின் வடபாகம் சோழப் பேரரசுடன் இணைக்கப்பட்டு ஒரு மண்டலமாக 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆளப்பட்டதால், தமிழ்மொழி மற்றும் சைவசமயம் ஆகிய வற்றைப் பொறுத்து நீண்டகால விளைவுகள் இலங்கையில் உண்டு பண்ணப்பட்டன. சோழராட்சியின் போது தொடங்கப்பட்ட சில போக்குகள் சிங்கள வம்சத்தின் ஆட்சி மீண்டும் நிறுவப்பட்ட காலத்தில் திருப்பிவிட முடியாத போக்குகளாய் அமைந்தன.

சோழருக்கும் சிங்கள வம்சத்தவர்க்கும் இடையிலான போராட்டம் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் தொடங்கியது. முன்னர் கூறியதுபோல இதற்கான பின்னணி ஏழாம் நூற்றாண்டிலிருந்து நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சிகளில் காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் பேரரசுகள் தோற்றம் பெற்ற காலத்தில் அனுராதபுரத்து அரசு தென்னிந்திய அரசியலில் கலந்துகொள்ள நேரிட்டது. பொது வாக ஆதிக்கம் மிகுந்த வல்லரசுக்கு எதிராகப் போராடிய அரசுகளுக்கு அனுராதபுர அரசு ஆதரவு கொடுப்பதில் ஈடுபட்டது. முதலில் பண்டியப் பேரரசுக்கு எதிராகப் பல்லவருக்கும் பின்னர் சோழருக்கு எதிராகப் பாண்டிய ருக்கும் சிங்கள வம்சத்தவர் படையுதவி கொடுத்தனர். சோழப் பேரரசு விரிவடையத் தொடங்கியபோது தென் எல்லையில் சேரர், பாண்டியர் மற்றும் சிங்களர் கூட்டாகச் சோழரை எதிர்த்தனர்.

**பராந்தகன் வெற்றி**

சோழருடைய படைகளுக்கும் சிங்களர் படைகளுக்குமிடையில் ஏற்பட்ட முதலாவது நேரடிப் போர் 915 அளவில் நடைபெற்றது. அப்போர் வெள்ளூரில் நடைபெற்றது. முதலாம் பராந்தக சோழன் பாண்டிய அரசைக் கைப்பற்ற முயன்றபோது, பாண்டிய மன்னன் ராஜசிம்மனுக்கு உதவியாக அனுராத புரத்து மன்னன் ஐந்தாம் கஸ்ஸப (913-923) என்பான் தன் படைகளை அனுப்பி வைத்தான். வெள்ளூரில் பாண்டியர் படையும் சிங்களர் படையும் சோழர் படைகளால் வெற்றிகொள்ளப்பட்டன.

வெள்ளூரில் நடைபெற்ற பெரும் போர் பற்றிச் சோழர் கல்வெட்டுக்களும் இலங்கையின் பாளி வரலாற்றேடான சூளவங்ஸ நூலும் தகவல் தருகின்றன. சிங்கள மன் னன் அனுப்பிய படை தமிழ்நாட்டில் அடைந்த தோல்வியைச் சூளவங்ஸ ஒரு தோல்வியாகக் கூற வில்லை. பாண்டிய மன்னனின் வேண்டுகோளின்படி அனுப்பப்பட்ட படையினர் நோய் வாய்ப்பட்டுப் பெருந்தொகையாக இறந்த காரணத்தால் சிங்கள மன்னன் தனது படையை இலங்கைக்குத் திருப்பியழைத்தான் என்றே பாளி நூல் விளக்கம் கொடுத்துள்ளது. இதற்கு மாறாகத் தமிழ் நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுச் சான்றின்படி சிங்கள மன்னன் அனுப்பிய வலிமை வாய்ந்த பெரும் படை பாண்டிய ராஜசிம்மனுடைய படைகளுடன் கூடிப் பராந்தக சோழன் படைகளைத் தாக்கின என்றும், வெள்ளூரில் நடைபெற்ற கடும் போரில் பாண்டியர் படையும் சிங்களர் படையும் படுதோல்வியடைந்தன என்றும் அறியக் கிடக்கின்றது. இந்த வெற்றிக்குப் பின் பராந்தக சோழன் 'மதுரையும் ஈழமும் கொண்ட' என்ற விருதைப் பெற்றான்.

**சிங்கள-பாண்டிய நட்புறவு**

பராந்தக சோழன் சிங்கள-பாண்டியப் படைகளை முறியடித்தாலும், சிங்கள-பாண்டியர் நட்புறவை முறியடிக்கத் தவறினான். தோல்வியுற்ற பாண்டிய மன்னன் தனது குலதனத்தையும் முடியையும் ஆரத்தையும் இலங்கைக்கு எடுத்துச் சென்று அனுராத புரத்து மன்னனிடம் அபயம் பெற்றான். சிறிதுகாலம் இலங்கையில் தங்கியிருந்த பின், பாண்டிய மன்னன் தனது தாயாருடைய அரசாகிய கேரளத்துக்குச் சென்றான். அவன் கொண்டு வந்த செல்வம் இலங்கையில் விடப்பட்டது. பாண்டிய நாடு பராந்தகன் ஆட்சிக்கு உட்பட்டது.

பாண்டிநாடு பேரரசுடன் இணைக்கப் பட்டாலும், சிங்கள-பாண்டிய நட்புறவு நீடிக்கும் வரை சிங்கள அரசு சோழருடைய பகையரசாகவே காணப்பட்டது. அதுமட்டுமின்றிப் பாண்டியருடைய முடியும் குலதனமும் இலங்கையில் வைக்கப்பட்டிருந்த படியால் அதனைப் பெற வேண்டிய தேவையும் சோழருக்கு இருந்தது. கைப்பற்றப்பட்ட பாண்டி நாட்டில் புதிய ஆட்சியாளனாக முடிசூட்டிக்கொள்ளப் பராந்தக சோழனுக்குப் பாண்டியர் முடி கிடைக்க வில்லை. ஆகவே, அடுத்தபடியாக இலங்கை மீது தாக்குதல் நடத்துவது அவசியமாகியது.

**பராந்தகன் படையெடுப்பு**

ஆனால் பத்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதி வரை இலங்கைப் படையெடுப்பைப் பராந்தகனால் நடத்த முடியவில்லை என்றே தோன்றுகிறது. பராந்தக சோழன் படையெடுப்பே சோழர் இலங்கை மீது நடாத்திய முதலாவது தாக்குதல் எனலாம். இப்படையெடுப்பு அனுராதபுரத்தில் நான்காவது உதய மன்னன் (945-953) ஆட்சி நடத்திய போது நடைபெற்றது. இப் படையெடுப்பின் போது சிங்களர் படையின் சேனாதிபதி உயிரிழந்தான் என்றும் உதயமன்னன் அனுராத புரத்தை விட்டுத் தெற்கு இலங்கைக்குச் சென்று பாதுகாப்பைப் பெற்றான் என்றும் பாளி வரலாற்றேடு சான்று பகருகின்றது. சோழர் பெற விரும்பிய பாண்டியர் குலதனமும் முடியும் அவர்களுக்குக் கிடைக்க வில்லை.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இப்படையெடுப்பின் போது அனுராத புரத்தில் சோழர் தமது ஆட்சியை நிறுவாவிட்டாலும் வட பகுதியில் அதிகாரம் பெற்றனர் என்று தோன்றுகிறது. இலங்கை மீது முழுக் கவனத்தையும் பராந்தகன் செலுத்தாது விட்டமைக்குக் காரணம் சோழப் பேரரசின் வட எல்லையில் ஏற்பட்ட நெருக்கடி எனலாம். அங்கு ராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் சோழர் நிலங்களைத் தாக்கியதால், தெற்கே இலங்கையில் போர் நடவடிக்கைகளைக் கைவிட்டு வட எல்லையில் கவனஞ் செலுத்த வேண்டிய தேவை பராந்தகனுக்கு ஏற்பட்டது. இதனால் அனுராத புரத்தைக் கைப்பற்றும் முயற்சி கைவிடப் பட்டது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

ஒபாமா தன் தாயோடும் அவரின் இரண்டாவது கணவன் லோலோ என்பரோடும் இந்தோனேஷியாவில் வசிக்க நேர்ந்தது. இந்த லோலோ என்பவருக்கும் தன் தாயாருக்கும் ஹவாய் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட நட்பைப் பற்றி முன்னர் நாம் கண்டோம்.

லோலோ அங்கே அப்போது படித்து வந்தார். அவரிடம் நல்ல பண்புகள் காணப் பட்டன. ஆள் கட்டையானவர். மண்ணிறம். கருமையான முடி. ரென்னிஸ் நன்றாக விளையாடுவார். அமைதியான சிரிப்பு. எந்தச் சூழலிலும் தன் நிலையிலிருந்து தளம்பாதவர்.

ஒபாமாவுக்கு நான்கு வயதாயிருக்கும் போது அவரின் தாத்தாவோடு லோலோ செஸ் விளையாடுவார். ஒபாமாவுக்கு ஆறுவயது வரைக்கும் தனக்குக் கிடைத்த நேரங்களில் அந்த விளையாட்டைத் தொடர்ந்தார். கூடவே ஒபாமாவுடன் மல்யுத்தமும் செய்வார்.

ஒருநாள் ஒபாமாவின் தாய் மகனை தன் முன் இருத்தி ஒரு இரகசியத்தை அவனிடம் கூறினாள்.லோலோ தன்னைத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறுகிறார். அதைத் தொடர்ந்து எல்லோரும் அமெரிக்காவை விட்டு வேறொரு நாட்டுக்குச் செல்ல வேண்டும். குழந்தை ஆச்சரியப்படாதவனாகத் தன் சம்மதத்தைக் கொடுத்துவிட்டான். ஒன்று மாத்திரம் கேட்டு வைத்தான். "அம்மா நீங்கள் உண்மையில் அவரை விரும்புகிறீர்களா?" இந்த விடயங்கள் ஏனோ அவன் மனதில் தெய்வாதீனமாகத் தோன்றியது. தாயின் விருப்பம் மிக முக்கியமானது என்று உணர்ந்தான்.

தாயின் தாடை நடுங்கியது. கண்கள் குளமாகின. ஒபாமாவை கட்டி அணைத்து நீண்டநேரம் மூச்சுப் பேச்சின்றி அப்படியே வைத்து முத்தமிட்டாள். அவனுக்கு அது பலத்தைத் தந்தது.ஆனாலும் ஏன் என்று புரியவில்லை.

இதன் பிற்பாடு லோலோ சடுதியாக ஹவாயை விட்டு நீங்க வேண்டி ஏற்பட்டது. அம்மாவும் மகனும் மாதக் கணக்கில் பயண ஆயத்தங்களைச் செய்தனர். பாஸ்போர்ட் விசா, விமானச் சீட்டு, ஹோட்டல் புக்கிங், இன்னோரன்ன வேலைகளை முடிக்க வேண்டியிருந்தது.



தாத்தா உலகப் படத்தில் இந்தோனேஷியாவைக் கண்டுபிடித்து அங்குள்ள தீவுக் கூட்டங்களின் பெயர்களை வரிசையாக சொல்லி மனப்பாடம் செய்தார்.

ஜாவா, போர்ணியோ, சுமத்திரா, பாளி போன்ற வாசனைத்திரவிய தீவுகள் அந்தக் காலத்தில் ஸ்பைஸ் தீவுகள் என்று அழைக்கப்பட்டன.

மர்மங்கள் நிறைந்த தீவுகளாக வர்ணிக்கப்பட்டன.புலிகளும் ஒராங்கூட்டான் என்ற மனிதக் குரங்குகளும் இன்றும் நிறைந்து காணப்படுகின்றன.

ரூட்-பாட்டி ராஜாங்கத் திணைக்களத்துக்குப் போன் போட்டு இந்தோனேஷியா பற்றி விசாரித்தார். யாரைக் கேட்டாலும் "இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது" என்பர். பாட்டி பல றங்குப் பெட்டிகள் நிறைந்த உணவுப் பொருட்களைப் பொதிசெய்தாள்.

கடைசியில் ஒருவாறு பாண் ஆம் (Pan Am) ஜெற் விமானத்தில் ஏறி பூகோளத்தைச் சுற்றிய பயணத்தை ஆரம்பித்தார்கள். மூன்று நாட்கள் யப்பானில் தங்கிச் சென்றார்கள்.அப்போது எலும்பையும் விறைக்க வைக்கும் மழை பெய்துகொண்டிருந்தது. கமாக் கூற என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள பெரிய வெண்கலப் புத்தபெருமானின் சிலையைப் பார்க்க நேர்ந்தது.

ஜகார்த்தா வந்தடைந்ததும் கீழே இறங்கி நடந்தபோது நடைபாதையில் போடப்பட்டிருந்த தார் உருகிக் கொதித்து குமிழ்ந்து கொண்டிருந்தது. வெயில் இரும்பு உருக்கும் உலையாகக் கொதித்தது. **21**

ஒபாமா தன் தாயைக் காப்பாற்றும் நோக்கோடு அவளின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான். தாயையும் மகனையும் வரவேற்க லோலோ விமான நிலையத்திற்கு வந்து காத்திருந்தார்.

கொஞ்சம் எடை கூடியிருந்தது.அவரின் சிரிப்பை மறைத்து தடித்த மீசை, தன்னை விளம்பரம் செய்தது. ஒபாமாவின் தாயைக் கட்டியணைத்தவாறே மகனைத் தூக்கி விளையாடினார் லோலோ. அவருடன் வந்த ஒருவர் பெட்டி படுக்கைகளைத் தூக்கி காரில் ஏற்றினார். லோலோவைச் சுற்றி சீருடை தரித்த போர் வீரர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

தாயார் கொஞ்சம் பயந்தவளாய் பெட்டிகளை சோதனையிடப் போகிறார்களா? என்று தன் கணவரிடம் கேட்டாள். அவர்கள் தன் நண்பர்கள் என்றும் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் ஆறுதல் கூறினார். அந்தக் கார் இரவல் வாங்கப்பட்டது. ஆனாலும் புதிய யப்பானிய மோட்டார் சைக்கிள் ஒன்றை அவர் வாங்கியுள்ளார். அது இப்போதைக்கு போதுமானது என்றார்.

**ஜம்பொன்**

ஒபாமாவை அருகில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்க்க அனுமதி பெற்றுவிட்டாராம் அவரின் உறவினர்கள் ஒபாமாவையும் தாயையும் பார்க்க ஆவலுடன் காத்திருக்கின்றனர். அம்மாவும் லோலோவும் பேசிக் கொண்டே வந்தனர். ஒபாமா பின்புற யன்னல் வழியாக புறக்காட்சிகளைக் கண்டு களித்தான். (தொடரும்)

# பிரதமர் கிலானியை நீக்க சர்தாரி ரகசிய திட்டம்
# பாகிஸ்தானில் அரசியல் சதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் கிலானியை பதவி நீக்கம் செய்ய அதிபர் சர்தாரியும், பாக். முஸ்லிம் லீக் (க்யூ) கட்சியும் ரகசிய திட்டம் தீட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்



நவாஸ் ஷெரீப், தேர்தலில் போட்டியிடுவதற்கு மேல் நீதிமன்றம் தடை விதித்தது. இதற்கு அதிபர் சர்தாரியே காரணம் என, நவாஸ் ஷெரீப் கட்சியினர் கருதினர்.

இதை வலியுறுத்தியும், முஷராப் ஆட்சிக் காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரியும் கடந்த சில வாரங்களாக எதிர்கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தன. சர்வதேச நாடுகளின் எச்சரிக்கையை தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அதிபர் சர்தாரி அடி பணிந்தார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிடப்பட்டது. நவாஸ் ஷெரீப் தேர்தலில் போட்டியிட தடை விதித்த மேல் நீதிமன்றம் உத்தரவை எதிர்த்து மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்றும் பாக். அரசு சார்பில் அறிவிக்கப்பபட்டது.

முன்னதாகவே இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகளுக்களுடனான பிரச்சினையை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என பாக். பிரதமர் கிலானி அதிபர் சர்தாரிக்கு எச்சிக்கை விடுத்திருந்தார். தற்போது கிலானியை பழி வாங்குவதற்கு அதிபர் சர்தாரி அதிரடி திட்டம் தீட்டியுள்ளதாக பாகிஸ்தான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பஞ்சாப் மாகாணத்தில் நவாஸ் ஷெரீப் கட்சி ஆதரவுடன் ஆட்சி அமைப்பதற்கு பாக். முஸ்லிம் லீக் (க்யூ) கட்சியின் அதிருப்தியாளர்கள் திட்டமிட்டனர். இதற்கு அதிபர் சர்தாரி முட்டுக்கட்டுடையாக இருந்துவருகிறார். இதையடுத்து பாக். முஸ்லிம் லீக் (க்யூ) கட்சித் தலைவர்களுடன் சர்தாரிக்கு நெருக்கம் ஏற்பட்டுள்ளது. மத்தியில் சர்தாரியின் பாக். மக்கள் கட்சிக்கு பாக். முஸ்லிம் லீக் (க்யூ) கட்சி ஆதரவு அளிக்கத் தயாராக உள்ளது.


இது தொடர்பாக சர்தாரிக்கும் , பாக். முஸ்லிம் லீக் (க்யூ) கட்சித் தலைவர்களான சவுத்ரி சுஜாத் ஹுசைன் ஆகியோருக்கும் இடையே ரகசிய சந்திப்பு நடந்தது. பஞ்சாப் மாகாணத்தில் இருகட்சிகளும் இணைந்து ஆட்சி அமைக்கவும் திட்டம் தயாராகி உள்ளது.

தங்களது எதிர்கால அரசியல் நடவடிக்கைக்கு பிர தமர் கிலானி தடையாக இருப்பார் என அதிபர் சர்தாரியும், சவுத்ரி சுஜாத்தும் கருதுகின்றனர். பிரதமருக்கு கூடுதலாக அதிகாரம் இருப்பதும் இதற்கு முக்கிய காரணம்.

மேலும், நவாஸ் ஷெரீப் கட்சியுடனான பிரச் சினையில் தனக்கு எதிராக செயல்பட்ட கிலா னியை பழிவாங்கவும் சர்தாரி திட்டமிட்டுள்ளார். நவாஸ் ஷெரீபுடன் கிலானி நெருக்கமாக செயல்படுவதாகவும் அவர் கருதுகிறார். இது போன்ற காரணங்களால் கிலானியைப் பிரதர் பதவியில் இருந்து நீக்குவற்கு சர்தாரியும், பாக். முஸ்லீம் லீக்(க்யூ) கட்சித் தலைவர்களும் ரகசிய திட்டம் தீட்டியுள்ளனர். இவ்வாறு அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறுகையில், பிரதமரை பதவி நீக்கம் செய்வது, பாராளுமன்றை கலைப்பது போன்ற அதிகாரங்களை அதிபருக்கு அளிக்கும் சட்டத் திருத்தத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். முஷரப் ஆட்சிக்கு வருவதற்கு முன் இருந்த அரசியல் பழைய சட்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றார்.

பாகிஸ்தானில் உள்ள நிலைமையை அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது. தற்போது இராணுவத் தலைமைத் தளபதி அஷ்பாக் கயானி இராணுவ ஆட் சியைக் கொண்டு வரவிரும்பவில்லை என்பதை வெளிப்படையாக சமீபத்தில் அறிவித்தது பெரும் திருப்பமாகும்.



அதே சமயம் நவாஸ் ஷெரீபையோ அல்லது சர்தாரியையோ முழு வதுமாக அமெரிக்கா நம்பிச் செயற்பட முடி யாத நிலை உள்ளது. காரணம் இந்த இரு வரும் முன்னர் அதிக ஊழல் புரிந்து மக்க ளால் புறந்தள்ளப்பட்டவர்கள்.

ஆனால் , இன்று இவர்களை விட்டால் பாகிஸ்தானில் ஜனநாயகம் தொடர்வதில் சிக்கல் எழும் . அதே சமயம் பிரதமர் கிலானி சற்று ஜனநாயகப் பாதையை தேர்வு செய்பவர் என்றும், அதே போல அவருக்கு ஏதும் இது வரை மோசமான பின்னணி இல்லாததாலும் அவர் மீது அமெரிக்கா உட்பட பல நாடுகள் கவனம் திரும்புகிறது.

மேலும்,நீதிபதி இப்திகார் சவுத்ரி மீண்டும் தலைமைப் பெர்றுப்பேற்றால், சர்தாரி மீதான பழைய வழக்குகள் உயிர்ப்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே, மிக மோசமான அரசியல் சூழ் நிலை இருக்கும் நாட்டில் கிலானி புதிதாக முக்கியத்துவம் பெறலாம் என்ற சூழ் நிலை காணப் படுகிறது. (ஓ-5)

## பாக்.ஆட்சிமுறையில் மாற்றம்
## சர்தாரிக்கு கிலானி கெடுபிடி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அரசியலமைப்பில் அதிபருக்கு அதிகளவில் இருக்கும் அதிகாரப் போக்கு விரைவில் மாற்றப்படும் எனபிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் பெரிய அளவில் அரசியல் மாற்றம் ஏற்படும் என உலகமே காத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்துள்ள பிரதமர் கிலானியின் பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிலானி கூறியுள்ளதாவது,

பாகிஸ்தானில் தற்போது நடை முறையில் அதிபருக்கு ஆட்சி அதிகாரம் அதிகள வில் இருக்கிறது. இது விரைவில் மாற்றப் படும். இதற்கு நவாஸ் ஷெரீப்புடன் ஆலோசித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். ஏற்கனவே மேல்நீதி மன்றம் முன்னாள் நீதிபதி இப்திகார் சவுத்ரியை மீண்டும் பணியமர்த்த இடப்பட்ட உத்தரவு சர்தாரிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நவாஸ்-கிலானியிடை யில் ஏற்பட்டுள்ள புதியநட்புறவு, கிலானி யின் அச்சுறுத்தும் பேட்டிகள் ஆகியன பாக்.அரசியலில் தனித்து விடப்பட்டுள்ள சர்தாரிக்கு கிலானி போட்டுள்ள கெடுபிடி என கூறப்படுகிறது. (ஓ-5)

## இலங்கையில் இனவெறி வாதம் தடுக்கப்பட வேண்டும்

இலங்கையில் இனவெறி தடுக்கபட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. டி.கே. ரங்கராஜன் கூறியுள்ளார்.

நெய்வேலியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நிதியளிப்பு விழாவும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பேசிய டி.கே. ரங்கராஜன் எம்.பி.,

அகில இந்திய கட்சியான பாஜக வட மாநிலங்களில் காலூன்றி இருந்தாலும் தென்மாநிலத்தில் 4 அல்லது 5 எம்.பி.க்கள். மட்டுமே பெறமுடியும். தென்னகத்தில் பாஜக காலூன்றுவது மிகவும் கடினம். இலங்கையில் சிங்கள இனவெறி வாதம் தடுக்கப்பட வேண்டும்.

அது போரினால் அல்ல, பேச்சு வார்த்தையில் தான் தீர்க்க வேண்டும் என்பது தான் எங்கள் கொள்கை என்றார். (ஓ-5)

## விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியில் சேர்ப்பதா?
## தமிழக காங்கிரஸ் பிரமுகர்கள் கடும் எதிர்ப்பு

(சென்னை)

தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் இடம் பெறக்கூடாது என்ற கோரிக்கை, தமிழக காங்கிரஸ் கட்சியில் வலுவடைந்துள்ளது. சத்தியமூர்த்தி பவன், ராஜிவ் நினைவிடம், டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகம் முன், உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவிக்க காங்கிரசார் முடிவெடுத்துள்ளனர்.

தமிழக காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவன் மீது சில மாதங்களுக்கு முன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் தாக்குதல் நடத்தினர். காங்கிரஸ் தொண்டர்கள் மீது கல் வீசினர். காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன் சிங், ராஜிவ், ராகுல் உருவப்படங்களை கிழித்து எறிந்தனர். தீ வைத்து கொளுத்தினர்.

இதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் காங்கிரசார், திருமாவளவனுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை நடத்தினர். கடந்த 15 ஆம் திகதி நிருபர்கள் சந்திப்பின் போது முதல்வர் கருணாநிதி கூறுகை யில்,

தி.மு.க கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நீண்ட காலமாக இருக்கிறது. அக்கட்சி தொடர்ந்து எங்கள் கூட்டணியில் நீடிக்கும் என்றார். முதல்வரின் இந்த அறிவிப்பால் காங்கிரஸ் கட்சியினர் அதிர்ச்சி அடைந்தனர். தங்கபாலுவும், சுதர்சனும், யார் கூட்டணியில் இருப்பது என்பது குறித்து மேலிடம் தான் முடிவு செய்யும் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையில், விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியில் சேர்க்கக்கூடாது என காங்கிரசார் இரத்தக் கையெழுத்து இயக்கம் நடத்தினர். அந்தக் கையெழுத்து படிவம், சோனியா, குலாம் நபி ஆசாத், ராகுல், பிரியங்கா மற்றும் ஐவர் குழுவினரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வேலூரில் நடந்த காங்கிரஸ் செயல் வீரர்கள் கூட்டத்தில் ஞானசேகரன் எம்.எல். ஏ., பேசுகையில் திருமாவளவனை கூட்டணியில் சேர்ப்பது, தூக்குப் போட்டுக் கொள்வதற்கு சமம்;

காங்கிரஸ் - தி.மு.க., வேட்பாளர்கள் தோல்வி அடைவர் என காரசாரமாகப் பேசினார். அவரது பேச்சுக்கு காங்கிரஸ் கட்சியினரிடம் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. விடுதலைச் சிறுத்தைகளுடன் கூட்டணி அமைக்க வேண்டாம் என்ற கருத்து காங்கிரசார் மத்தியில் தீவிரமடைந்து வருகிறது.

கருணாநிதியின் கருத்திற்கு எதிர் கருத்து கூறி பிரச்சினையை பெரிதாக்கினால் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்ற நோக்கில், மாநில நிர்வாகிகள் புதிய அணுகுமுறையை மேற்கொண்டுள்ளனர்.

நகர ஒன்றிய காங்கிரஸ் நிர்வாகிகள் அகில இந்திய காங்கிரஸ் தலைமைக்கும் மாநில தலைமைக்கும் கோரிக்கை மனுக்களை அனுப்புமாறு கூறியுள்ளனர். அதில் காங்கிரஸ் கட்சியை ஒழிப்பேன் என்றும், சோனியா படத்தை எரித்தவர்களுடன் கூட்டணி வைக்கக்கூடாது; கூட்டணி வைத்தால் காங்கிரஸ் ஆதரவாளர்களின் மனம் புண்படுமெனக் குறிப்பிட்டு மனுக்களை சோனியா, தமிழக பொறுப்பாளர், மாநிலத் தலைவர், தேர்தல் குழுவினருக்கு அனுப்பி வருகின்றனர்.

மாநிலம் முழுவதும் கட்சி நிர்வாகிகளிடம் கடிதம் பெற்று அதை அகில இந்திய தலைமையிடம் கொடுத்து விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியில் சேர்க்க விடாமல் கருணாநிதிக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் மனுக்கள் அனுப்பப்படுவதாக காங்கிரசார் தெரிவித்தனர்.

விடுதலை சிறுத்தைகளை சேர்த்தால் தேர்தல் வேலை செய்யமாட்டோம். *காங்கிரஸ் பிரமுகர்கள் ஆவேசம்:* காங்., கூட்டணியில் விடுதலைச சிறுத்தைகளை சேர்த்தால் பதவியைத் துறப்போம் என அங்காளன் எம்.எல்.ஏ, தெரிவித்துள்ளார். சட்ட சபை தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகளை கூட்டணியில் சேர்ப்பது குறித்து காங்., கட்சியில் சர்ச்சை எழுந்துள்ளது. (ஓ-5)

# பொது தொல்லை பற்றி பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டியவை

(நேற்றைய தொடர்ச்சி)

O.I.C.கஹா துட்டுவ கல்லுடைக்கும் கம்பனி ஒன்றுக்கு எதிராக அதன் இரைச்சல் அதிர்வு என்பவற்றுக்காக O.I.C.கஹா துட்டுவ வழக்க தாக்கல் செய்தார். கம்பனிக்கும் பாரதூரமான பாதிப்பின்றி வடிவமைக்கப்பட்ட நிபந்தனையுடனான கட்டளை மூலமாக சாதாரண வேகத்தில் அயலவர்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் தொழிற்சாலையை கொண்டு நடத்துவதற்கான நிபந்தனையுடனான கட்டளை வழங்கப்பட்டது. O.I.C. Moratuwa vs Krishan Jayalal Company எனும் வழக்கில் தச்சுத் தொழிற்கூட்டத்தின் இரைச்சல் பொது மக்களுக்கு தொல்லையாக அமைந்துள்ளதென வழக்கிடப்பட்டது. நீதிமன்றம் சத்தத்தின் அளவு சட்டத்துக்கு உட்பட்டதாகவும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை இயங்குவதற்காகவும் செய்யப்பட்ட நிபந்தனையுடனான கட்டளை வழங்கப்பட்டது.

Police Teldeniya Vs. M.M. Mohamed Razeen என்ற வழக்கில் டொலமைட் உடைக்கும் தொழிற்சாலை ஒன்றினால் ஏற்படும் தொல்லைக்காக வழக்கிடப்பட்டது. நீதவான், காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை இயங்குவதற்கும் ஏனைய நேரங்களில் எவ்வித இயந்திரத்தினையும் பாவிக்கவும் தடை செய்து வடிவமைக்கப்பட்ட நிபந்தனையுடனான கட்டளையை பிறப்பித்தார்.

EFL and Others Vs Acroglass Industries Ltd என்ற வழக்கில் Acroglass Industries Ltd யினால் ஏற்படுத்தப்பட்ட தூமம், மணம், கூடுதலான சத்தம் என்பவற்றை தொல்லையாக கருதிச் செய்யப்பட்ட வழக்கில் தொழிற்சாலையை ஒரு வருடத்துடன் வேறு இடத்துக்கு மாற்றுவது என்ற அடிப்படையில் தீர்வு காணப்பட்டது. O.I.C. Police station weligada Vs Dharmasena என்ற வழக்கில் பிளாஸ்டிக் தொழிற்சாலையினால் வெளியிடப்பட்ட சத்தம் தொடர்பில் பகலில் மட்டுமே தொழிற்சாலையை இயக்குவதாக கூறி சமாதானம் எட்டப்பட்டது.

O.I.C. Talengcna Vs Mithraratne எனும் வழக்கில் இரவில் தொழிற்சாலை இயங்குவதில்லை என்ற அடிப்படையில் நிபந்தனையுடனான கட்டளையாக்கப்பட்டது.

Singalanka Stand and Chemical Ltd vs Srisena என்ற வழக்கில் தொழிற்சாலை இயக்கத்தின் விளைவாக உருவாகக்கூடிய சல்பூரிக் அமிலத்தின் தாக்கத்தால் அயலிலுள்ள கிணற்றுநீர் அசுத்தமடைந்தது என்பதுடன் பொதுவாகவே சூழலை அது பாதித்தது.

ஹோமகமை நீதவான் இவ்வாறு சூழல் மாசுபடல் பொருத்தமற்றது எனக் கூறி குறித்த உற்பத்தியை தடுப்பதற்கான நிபந்தனையுடனான கட்டளையை பிறப்பித்தார்.

கட்டான வில் உள்ள Basen Lanka and disan Lanka என்கின்ற இறப்பர் தொழிற்சாலைகளுக்கு எதிராக நீர்கொழும்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் இத் தொழிற்சாலைக் கழிவுகளால் பிரதேச மக்களின் கிணறுகள் மாசாக்கப்பட்டன.

நீதிமன்றம் இடைக்கால உத்தரவை வழங்கியது. இது தொழிற்சாலையின் கழிவுகளை அகற்றுவதற்கு தனியான பிரிவொன்றை அமைத்ததன் காரணமாக இணக்கமாக இவ்வழக்கு தீர்க்கப்பட்டது.

L.M. Femando Vs John Fernando என்கின்ற வழக்கில் ஐஸ்கிறீம் தொழிற்சாலையால் ஏற்பட்ட மாசடைதல் காரணமாக நீதிமன்றம் இடைக்கால உத்தரவை வழங்கியதுடன் நீதிமன்றம் சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெறும்படியும் மாசடைதலை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் படியும் பணித்தது.

O.I.C. Meerigama vs Walls ceylon Ltd. என்ற வழக்கில் ஐஸ்கிறீம் தொழிற்சாலைகளினால் ஏற்பட்ட மாசடைதல் காரணமாக அயலில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைவதாக கிராமவாசிகள் நீதிமன்றுக்கு தெரிவித்ததையடுத்து நீதிமன்றம் குறித்த இடத்திற்குச் சென்று மேற்பார்வையை மேற்கொண்டதுடன் தொல்லையைத் தவிர்க்கும் படியான ஒரு நிபந்தனையுடனான ஒரு கட்டளையை வழங்கியது.

A.P. sunendra vs Manager Kandian Hotel என்ற வழக்கில் ஹோட்டல் நீர் தமது கழிவு நீரை நியாயத்தரமுள்ள கால்வாயில் விட்டனர். வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஹோட்டல் நிர்வாகத்தினர் கழிவு நீரை பவுசரால் எடுத்துச் சென்று அகற்றுவதற்கு உடன்பட்டனர்.

Subash Kumar vs state of Bihar என்னும் வழக்கில் இந்திய உயர் நீதிமன்றம் அசுத்தமடையாத நீரையும் காற்றையும் பெற்றுக் கொள்வது பிரஜைகளின் அடிப்படை உரிமையாகும் எனத் தீர்த்தது. இந்திய அரசியலமைப்பின் 21 ஆம் பிரிவின் கீழ் வாழ்வதற்கான உரிமை அடிப்படை உரிமையாகும்.

**சட்டத்தரணி தி. திருச்செந்தில்நாதன்**

இவ்வுரிமை அசுத்தமடையாத நீரையும் காற்றையும் பெற்றுக் கொள்வதற்கான பிரஜைகளின் அடிப்படை உரிமையாகும். (முற்றும்)

# யுத்தம், கடத்தல், காணாமல் போதலால் அரசு சேவையாளர்களின் குடும்பங்கள் நிர்க்கதி நிலை

## அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்கிறார் கனகசபை எம்.பி.

(கொழும்பு)

யுத்தம், கடத்தல் மற்றும் காணாமல் போதல் ஆகிய காரணங்களால் நிர்க்கதியாகியுள்ள அரச சேவையாளர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. கஷ்டப்படுகின்ற மேற்படி அரச சேவையாளர்களின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுக்க அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ரி. கனகசபை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற படையினரின் விதவைகள் மற்றும் குழந்தைகள் ஓய்வூதிய திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே கனகசபை எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகளும், முரண்பாடுகளும் காணப்படுகின்றன. நாட்டில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். முதிர் நிலையை அடைந்தவர்கள் தமது சீவியத்தை கௌரவமாக நடத்துவதற்கு இந்த ஓய்வூதியமானது பெரிதும் உதவுகின்றது. எனவே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவே வேண்டும்.

கடந்த 2006 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. ஆனால், அதில் ஓய்வூதியர்களுக்கான அதிகரிப்பு மிகவும் சொற்பமாகவே அமைந்திருந்தது. சம்பள அதிகரிப்புக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்துகின்ற ஜே.வி.பி இளைஞர்களைப் போல் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அவர்களுக்கு சக்தி இல்லை.

எனவே, அவர்களின் ஓய்வூதியம் வ்ழங்கப்பட வேண்டும் என்பதுடன் அதனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, யுத்தம், கடத்தல் மற்றும் காணாமல் போதல் ஆகிய காரணங்களால் நிர்க்கதியாக்கப்பட்டுள்ள குடும்பங்கள் பாரிய பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன. மனைவி, குழந்தைகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

மேற்படி காரணங்களால் பாதிக்கப்பட்ட அரச சேவையாளர் தொடர்பில் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவர்களின் குடும்பங்களுக்கும் ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுப்பதில் அமைச்சு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ஓ-5)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 23 03 1947

மறைவு 01 04 2008



### ச.சிவசிதம்பரம்

ராகவேந்தராய் வரமொன்று பெற்று இலங்கையின்
வடபால் நல்லூரான் அயல் எடுத்து முதன்முதலில்
ராகவேந்தர் நாமத்தில் மிருத்திகா பிருந்தாவனமொன்று அமைத்து!
அடியவர்கள் துதிபாடி வழிபட வைத்தவரே!
ஆவின்பால் சுவையை இழந்ததுபோல்
அன்றலர்ந்த பூக்கள் அதன் கொடியை இழந்ததுபோல
நெருடல் உலகை விட்டு இறைவன் தாழ் சேர்ந்த
வருடமொன்று வாட்டமுடன் கழிந்ததையா!
ஊமையாய் எம்மை இவ்வுலகில் விட்ட தினம்
ஆமையாய் நகர்ந்து அகவை ஒன்று ஆனதையா!
கண்ணிரண்டை மூடி நீர் கன தூரம் சென்று
பன்னிரண்டு திங்கள் பாவமாய் கழிந்ததையா!
முத்தான ராகவேந்தரிடம் முழுதாய் சரண் அடைந்தீர்.
நித்தலமே எம்மில் நினைவகலா நீர் வாழ்வீர்.
சேர்ந்து நாம் களிக்கும் காலம்
வந்திடாதப்பா மீண்டும் வழிபடும் தெய்வம் எல்லாம்
உந்ததை மீண்டு கண்டு உவந்திடத்தானய்யா

*ஓம்சாந்தி*

மனைவி, பிள்ளைகள், மருமகன்
159 A, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/2210)


# பிரபாகரன் ஆயுதத்துடன் வந்தால் அமைச்சு பதவி கொடுப்பீர்களா?

## தயாசிறி எம்.பி சபையில் கேள்வி

(கொழும்பு)

ஆயுதக் கலாசாரம் அற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இன்று ஆயுதம் தாங்கிய குழுவினரும் அங்கம் வகிக்கின்றனர். நாளைக்கு விடுதலைப் புலிகளும் ஆயுதத்துடன் வந்தால் அமைச்சுப் பதவி கொடுப்பீர்களா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற படையினரின் விதவைகள் மற்றும் குழந்தைகள் ஓய்வூதிய திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

ஆயுதக் கலாசாரம் அற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஆயுதக் குழுவினரும் அங்கம் வகிக்கின்றனர். அக்கட்சியை இன்று நீலப் புலி என்றுதான் கூறவேண்டும். அக்கட்சியில் புலிகள் இல்லை என்று எவ்வாறு கூறுவது.

தலதாமாளிகையின் மீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்டவர்களும் ஜே.வி.பியினரும் இன்று அரசாங்கத்தில் இருக்கின்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எழுதியவர்கள் இன்று அரசாங்கத்தில் இணைந்து கொண்டு ஒப்பந்தத்தை விமர்சிக்கின்றனர். இந்நிலையில் பிரபாகரனை ஆயுதங்களை கீழேவைக்குமாறு கோருகின்ற அரசாங்கம் ஆயுதத்துடன் வந்தோரை அரசாங்கத்தில் இணைத்துக் கொண்டுள்ளது. அதே போல பிரபாகரன் ஆயுதத்துடன் வந்தால் அவருக்கு வடக்கு இனப்பிரச்சினை விவகார அமைச்சு பதவி கொடுப்பீர்களா என்றும் கேள்வி எழுப்பினார். (ஓ-5)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

6-III

மொறீசியஸ் நாட்டில்...

'விவசாயிகளுக்கான வாழ் நாள் கல்வி' திட்டமானது மொறீசியஸ் நாட்டில் மிகவும் சிறப்பாக நடை முறைப்படுத்தப்படுகின்றது. "Cognitive social capital" என்னும் வகை முறையில் பிறரொருவரின் துணையின்றி குறிப்பாக நிதி வழங்கும் நிறுவனங்களின் உதவியின்றி தமது முயற்சியில் தாமே பணத்தை முதலீடு செய்து சிறுகச் சிறுகச் சேமித்து தமக்கென நிதியை உருவாக்கியிருக்கிறார்கள். இதன் மூலமாக நல்லதொரு சமூகக் கட்டமைப்பை அவர்களால் உருவாக்க முடிந்திருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கு அடிபணியாது தமது கூட்டு முற்சியினால் தங்களது பணத்தையே முதலீடு செய்து வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

வெளி நாட்டு நிறுவனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கணிசமான அளவு நிதி அவர்களது முகாமைத்துவ ஆளணிக்கும் செயற்பாட்டிற்கும் செலவு செய்யப்படுகின்றதென்ற குற்றசாட்டுக்கள் எழுகின்ற நிலையிலும் அரசாங்கத்தினது நிதியை முழுக்க நம்பியிருக்காமல் மொறீசியஸ் நாட்டு விவசாயிகள் தங்களது தேவை கருதிய திட்டங்களை செயற்படுத்த தேவையான நிதியை தாமாகவே சேகரித்து பயன்படுத்தம் இம் முறை மூலம் அந்நிதி முழுவதுமாக அவர்களால் முகாமைத்துவப் ப்டுத்தப்பட்டு அவர்களின் தேவைக்கான செலவாகவே பயன்படுத்தப்படுகின்றது. இது ஒரு சிறப்பான ஒரு திட்டமாகவும் கருதப்படுகின்றது.

இந்தியாவில்... தமிழ்நாட்டிலே.

இந்தியாவில் கிராமஞ் சார்ந்த திட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளன. 'விவசாயிகளுக்கான வாழ் நாள் கல்வி' திட்டம் தமிழ் நாட்டின் மதுரை மாவட்டத்திலுள்ள தேனி என்னும் இடத்தில் உள்ள கிராமங்களில் மிகவும் சிறப்பாக நடை முறைப்படுத்தப்படுகின்றது. கிராமத்தை முழுயாக இத் திட்டத்தின் மூலம் மாற்றியமைப்பதில் வெற்றியும் கண்டிருக்கின்றார்கள்.

மூட நம்பிக்கையிலும் பெண்ணடிமையிலும் ஊறிப் போன தமிழ் நாட்டு கிராமங்களில் அனைவரும் அதிசயிக்கத்தக்க வகையில் இவ்வாறான மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. பாரதி கண்ட கனவு மெல்ல மெல்ல நனவாகிக் கொண்டிருக்கின்றது. அதுவும் பாரதி பிறந்த பாரத தேசத்திலேயே இவ்வளவும் நடக்கின்றது. பெரிதாக வெளியூர் மக்கள் வருகை தராத குக்கிராமங்கள் எல்லாம் கிராம கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து அனைவரும் இணைந்து வாழும் நகரங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. 'வீட்டுக் குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்பது யாதார்த்தமாகும் காலம் உருவாகியிருக்கிறது.

'நல்லதோர் வீணை செய்து அதை நலங் கெட புழுதியில் எறிவதுண்டோ' என இனியும் பாட்டளவில் பாடிக் கொண்டிருக்காது அந்த வீணைகளெல்லாம் தன்நிலை உணர்ந்து வீரத்துடன் வீட்டிலிருந்து வெளி வந்து கற்று நாலு காசு சம்பாதிக்குமளவிற்கு வளர்ந்திருக்கின்றார்கள். வெளியுலகை தமது கண்களாலேயே தங்களது இடத்திலிருந்து கொண்டே பார்த்து தம்மை மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஆணுக்கு பெண் சமம் என்பதை செயலால் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நலிந்து சோர்ந்து போயிருக்கும் ஆண்களில் சிலர் வேலையென்று எதுவுமில்லாது வீட்டுப் பெண்களின் வருமானத்தை நம்பியிருக்கும் பரிதாப நிலையைக் கூட காணக் கூடியதாயிருக்கின்றது. தனது வீட்டு செலவுக்காக வீட்டுப் பெண்கள் மட்டும் வேலை செய்வதையும் தமது குழந்தைகளை வளர்ப்பதில் கணவனை நம்பியிருக்காத தன்மையும் இங்கே காணப்படுகின்றது.

வழமையென்று இருந்த பல மூடப் பழக்கங்களிலிருந்து பெண்கள் தம்மை விடுவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பெண்ணடிமை விலங்கு பெண்களாலேயே அதுவும் படிப்பறிவேதுமில்லாத வீட்டுப் பெண்களாலேயே




உடைத்தெறியப்பட்டிருக்கின்றது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பெண்களை ஊக்குவிப்பதற்கு அவரவர் வீட்டு ஆண்களே முக்கிய பங்கு வகிக்கிறார்களென்பது தான். அவரவர் வீட்டு ஆண்கள் இப்போதெல்லாம் இவ்வாறாக தங்களது மனைவிமார் சமூக செயல்களில் ஈடுபடுவதை பெருமையாக நினைப்பதுடன் அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்பையும் வழங்குகின்றார்கள். நல்லதொரு சமூகக் கட்டமைப்புக்கான காலம் கனிந்து கொண்டிருக்கின்றது.

"விடியல்" என்பது தேனி என்னும் ஊரிலுள்ள அனைத்து கிராமங்களிலுமுள்ள பெண்கள் கூட்டாக இணைந்து உருவாக்கியுள்ள மகளிருக்கான அமைப்பு. இக்கூட்டமைப்பின் அனைத்துப் பதவிகளிலும் படிப்பறிவில்லாத பெண்களே இருக்கின்றனர். சிறுகச் சிறுகச் சேமித்த தமது பணத்தை பெரிய நிதிவளமாக மாற்றியிருக்கிறார்கள் இப் பெண்கள். ஒதுக்கப்பட்ட கிராம மக்களும் இணைந்து செயற்பட இடமளித்திருக்கிறது இவ் "விடியல்" என்ற மகளிர் அமைப்பு. இவை எல்லாவற்றிற்கும் ஒத்தாசையாக உதவிக்கரம் நீட்டியுள்ளது COL என்ற அமைப்பு. இதன் இணைப்பாளராக இவ்வமைப்பின் ஆலோசகராகவுள்ள பாலசுப்பிரமணியம் செயற்படுகின்றார்.

மிகவும் பின்தங்கிய கிராமங்களிலுள்ள பெண்கள் இணைந்து தமது கிராமத்துக்கென முதலாவது பாடசாலையை இந்நிறுவனத்தின் உதவியுடன் கட்டி நடாத்துகின்றார்கள். அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்படாததை பன்னாட்டு நிறுவனங்களின் திட்டங்களில் முக்கியத்துவப் படுத்தப்படாததை பெண்கள் அமைப்பு செய்து காட்டியிருக்கின்றார்கள். ப்பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதில் 'விடியல்' அரும் பங்காற்றுகிறது.

இவற்றிற்கெல்லாம் தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்படுத்தப்பட்ட மறுமலர்ச்சியே காரணம். செம்மறி ஆடு வளர்க்கும் பெண்களுக்கென Airtel நிறுவனம் குறைந்த கட்டணத்திலான மொபைல் போன் வசதி செய்து கொடுத்திருக்கின்றது. தரவையில் இருந்து மொபைல் போனினூடாக செம்மறி ஆட்டிற்கான தேவை பற்றியும் வேறு வேலைகளையும் பெண்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வெளியூர் ஆண்கள் குறிப்பாக சேட், டவுசர் போன்றவை அணிந்து உட்செல்ல முடியாத கிராமங்களிலுள்ள வீட்டுப் பெண்கள் இப்போதெல்லாம் அனைவருக்கும் கைலாகு கொடுத்து, கையெழுத்திடப்பழகி மிகவும் முன் மாதிரியாக மாற 'விடியல்' வழி செய்திருக்கின்றது. குறவர் இனமென்பதால் ஒதுக்கப்பட்டிருந்த பெண்களில் ஒருவரான 'ஜக்கம்மா' என்னும் பெண்மணி விடியல் அமைப்பில் செயலாளராக இருக்கின்றார்.

வெளியூர்களிலிருந்து இவ்வமைப்பிற்கு வருகை தருபவர்களுக்கெல்லாம் பெண்களே பொன்னாடை போர்த்தி விடுவதும், மாலை அணிவிப்பதும் சாதாரணமாகி விட்டது. தாலி கட்டிய மணாளனுக்காக மட்டும் மாலையிடுதலென்பது இப்போதெல்லாம் இவர்களிடம் எடுபடுவதில்லை. விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்பினால் குளோனிங் முறைமூலம் குழந்தை பெறலாம் என்ற போது ஆண்களுக்கான தேவை அரைவாசியாகிப் போய்விட்ட



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

நிலையில் பெண்களே தொழில் செய்து தமது வீட்டின் தேவையைப் பூர்த்தி செய்யலாமென்ற நிலை வரும் போது ஆண்களின் ஆதிக்கம் முழுமையாக தவிடு பொடியாகி விடும்.

படிப்பில், வேலையில், விளையாட்டில் என்றெல்லாம் பெண்கள் முன்னெழுகின்றதைப் பார்க்கின்ற போது போகின்ற போக்கில் பெண்களுக்கு சீதனம் கொடுக்க வேண்டிய காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதே இடத்திலுள்ள அருளானந்தா கல்லூரியில் விவசாயிகளுக்கான அனைத்துப் பயிர்ச்செய்கை முறைகள், கால்நடை வளர்ப்பு மற்றும் அவற்றின் பராமரிப்பு, நோய்கள் போன்றன உட்பட அன்றைய தின விலை விபரங்கள் அனைத்தும் கணனி திரையில் தொடுகை (Touch Screen) மூலமான தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விரிவாக்க சேவை உலகிலே முதன்முதலாக உருவாக்கப்பட்டிருக்கின்றது.

விவசாயிகளுக்கான மறுமலர்ச்சி மெல்ல மெல்ல உருப்பெற்ற வளர்ந்து கொண்டிருக்கின்றது. இம்மாதிரியான மறுமலர்ச்சி நம்மூரிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். 'விடியல்' போன்ற அமைப்புக்களின் உத்வேகமும், கடின உழைப்பும் ஏனையோருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். நாமும் எம் மூடக் கொள்கைகளில் இருந்து விடுபட்டு பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் வாக்கிற்கிணங்க நல்லதொரு புதிய உலகில் அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கும் யுகத்தில் காலடி எடுத்து வைத்து நடைபோட வேண்டும். அதிலே தான் பசுமையின் புரட்சி இருக்கப் போகிறது.

(தொடரும்)

## வடக்கில் புதிய குடியேற்றங்களை மேற்கொள்ளும் எண்ணம் இல்லை

### அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா



(கொழும்பு)

வடக்கில் விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்கப்படும் பிரதேசங்களில் புதிய குடியேற்றங்களை செய்வது தொடர்பாக எந்தவிதமான எண்ணமும் அரசாங்கத்திற்கு இல்லை. யுத்தம் முடிவடைந்து நிலமை வழமைக்கு திரும்பியதும் இடம் பெயர்ந்த மக்கள் சகல வசதிகளுடன் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலையில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

வடக்கில் விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்க்கப்படும் பிரதேசங்களில் புதிய குடியேற்றங்கள் செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளி வருகின்றன. அவ்வாறான எந்த எண்ணமும் அரசாங்கத்துக்கு இல்லை என்பதனை திட்டவட்டமாக கூறுகின்றேன். தற்போது வடக்கில் பிரதேசங்களை படையினர் மீட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகளவில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு சகல வசதிகளும் அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்படுகின்றன. இந்நிலையில் யுத்தம் நிறைவு பெற்று அங்கு நிலைமைகள் சுமூகமானதும் மக்கள் மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள். மட்டக்களப்பில் இது தான் இடம் பெற்றது.

வன்னி பகுதியில் அதிகமான பிரதேசங்களில் நிலக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவை அகற்றப்பட்வுடன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் நிலையில்மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப் படுவார்கள். ஆனால் அப் பகுதியில் புதிய குடியேற்றங்களை செய்யும் எந்த விதமான எண்ணமும் அரசாங்கத்துக்கு இல்லை என்பதனை திட்டவட்டமாக கூறுகின்றேன். (ஓ-5)

## இலங்கையில் தனித் தமிழீழம் அமைய வேண்டுமென்பது நியாயமற்றதாகும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் தனித் தமிழ்நாடாக உருவாகுவது நியாயமானதாகும். ஆனால் இலங்கையில் தனித் தமிழீழம் அமைய வேண்டுமென்பது நியாயமற்றதாகும். இதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை.

இந்துசமுத்திர வலயத்தை மேற்குலகத்தின் ஆளுமைக்கு உட்படுத்தவே விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் முயற்சிகளை அந் நாடுகள் மேற்கொண்டு வருவதாகவும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சாட்டுகின்றது. இவ்விடயம் தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர். குணதாச அமரசேகர மேலும் கூறுகையில் இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் தமிழ் மக்கள் மீது கொண் டுள்ள அன்பின் காரணமாக எமது பிரச்சினையில் அக்கறை காட்டுவதாக நாம் ஏமாந்து விடலாகாது.

இந்நாடுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் தலைவரைப் பயன்படுத்தி எமது நாட்டைப் பிரிப்பதற்கு முயன்றனர்.

இதன் மூலம் எமது வளங்களை சூறையாடுவதே அவர்களது நோக்கமாக இருந்தது.

ஆனால் மேற்குலக நாடுகளின் எண்ணம் தகர்ந்து விட்டபடியால் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும். அம்மக்ளுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்ற போர்வையில் நாட்டுக்குள் உள்ளிடுவதற்கு முயற்சிக்கின்றனர். அதேவேளை தென்னாசியாவின் இந்து சமுத்திரத்தில் மேற்குலகின் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கும்,விடுதலைப் புலிகளை பாதுகாப்பதற்குமே ஹிலாரி கிளிண்டன், நவநீதம் பிள்ளை, பான்கீமூன் போன்றோர் முயற்சித்து வருகின்றனர்.

ஆனால் எமது பிரச்சினையில் இரட்டை வேடம் போடும் இந்தியா உட்பட பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் இந்து சமுத்திரத்தில் மேற்குலகத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்த ஒரு போதும் இடமளிக்காது.

அரசியல் தீர்வை காணுமாறு கோரும் இந்தியாவின் வலியுறுத்தல் கைவிடப்பட வேண்டும். அதேபோன்று எமது பிரச்சினையில் மூக்கை நுழைக்க முயலும் மேற்குலக நாடுகள் அதனைக் கைவிட வேண்டும்.

எமது நாட்டுப் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியும். த்மிழ் மக்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருக்குமானால் நாம் பேசித் தீர்த்துக் கொள்வோம். இதில் வெளிநாடுகள் தலையிடத் தேவையில்லை. தமிழகம் தனி நாடாக வேண்டும். இந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலத்தில் தமிழ் பேசுபவர்களே பெரும்பான்மை இனமாக வாழ்கின்றனர். எனவே அவர்கள் பிரிந்து தனித் தமிழ்நாடாவது நியாயமானதாகும். ஆனால் இலங்கையில் தனித் தமிழீழத்தை உருவாக்க முயல்வது நியாயமற்ற செயற்பாடாகும். இதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்று குணதாச அமரசேகர தெரிவித்தார். (ஓ-5)

தவறான வழிகளில் சம்பாதித்த பொருளைக் காட்டிலும் கௌரவமான ஏழ்மையே சிறந்தது!
– ஈரான்

வலம்புரி

## கறந்த பால் முலை புகுமோ! குடாநாட்டில் ஏறிய விலை இறங்குமோ!

கறந்த பால் முலைபுகா, கடைந்த வெண்ணெய் மோர் புகா, உடைந்துபோன சங்கின் ஓசை ஒலிபெறா என்பது சிவவாக்கியரின் பாடல் வரிகள்.

சிவவாக்கியர் இன்று யாழ்ப்பாணத்தில் இருந்தால் மேற்கூறப்பட்ட பாடல் வரிகளுடன் ‘யாழ்ப்பாணத்தில் ஏறிய விலை, குறைவதில்லை... குறைவதில்லையே...’ என்று பாடி முடித்திருப்பார்.

அந்தளவுக்கு யாழ்.குடாநாட்டின் விலை அமைப்பு உள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறு யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். எனினும் அந்த வேண்டுகோளுக்கு அமைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதாகத் தெரியவில்லை.

விலைகள் உயர்வடையும்போது அவற்றை உடனடியாக அமுல்படுத்தும் விற்பனையாளர்கள் விலை குறைவடையும்போது அவற்றைக் குறைக்க முன்வராமை வேதனைக்குரிய விடயமே.

இத்தகைய நிலைமை உணவுச் சாலைகளிலும் இருக்கவே செய்கிறது. சீனியின் விலை அதிகரித்தவுடன் தேநீரின் விலையை உயர்த்துவதும், கோதுமை மாவின் விலை உயர்வடைந்ததும் சிற்றுண்டிகளின் விலையை அதிகரிப்பதிலும் கரிசனை காட்டும் உணவுச் சாலைகளின் உரிமையாளர்கள், விலை வீழ்ச்சியடையும் போது விலைக்குறைப்பைச் செய்வதில்லை.

இத்தகைய துரதிர்ஷ்டமான நிலைமையால் விலைக்குறைப்பு ஏற்படும்போதெல்லாம் யாழ். குடாநாட்டு நுகர்வோர் அதன் நன்மையை அனுபவிக்க முடியாமல் போகின்றது.

எனவே இது விடயத்தில் குடாநாட்டு வர்த்தகர்கள் பொறுப்புடன் செயற்பட்டு நுகர்வோர் நன்மையடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

இதேபோல் யாழ்.குடாநாட்டு மீன் சந்தைகளில் இடம்பெறும் ‘நிரம்பல் பதுக்கல்’ முறைமை இல்லாது செய்ய்ப்படுவது அவசியமாகும்.

அதாவது மீன் சந்தைகளில் கடலுணவின் நிரம்பல் அதிகரிக்கின்றபோது அவற்றை முழுமையாக விற்பனை செய்வதற்குப் பதிலாக நிரம்பல் அளவைக் குறைத்து சந்தையில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலை அதிகரிப்பைச் செய்யும் நிகழ்வு நடந்தேறுகின்றது.

இவ்வாறு பதுக்கப்படும் நிரம்பல் பழுதடைந்து போவது கூட தமக்கு இலாபமாக அமையும் என மீன் சந்தை மொத்த வியாபாரிகள் கருதிக் கொள்வது துரதிர்ஷ்டமாகும்.

எனவே இது விடயத்திலும் நுகர்வோரின் நலன் கவனிக்கப்படவேண்டும்.

# இலங்கை அரசின் கடும்போக்கு செயற்பாடுகளால் உலகம் முழுவதும் எதிர்ப்பு நடவடிக்கை

## இடதுசாரி முன்னணி தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

இலங்கை அரசின் இன்றைய கடும் போக்கான நடவடிக்கைகள் காரணமாக உலகம் முழுவதும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதன் தாக்கத்தை அரசு எதிர் கொண்டுள்ளது என்று இடது சாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொம்பனித்தெரு நிப்போன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

எமது கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் கல்விப் பிரிவு பொறுப்பாளரும் கறய பத்திரிகையின் ஆலோசகருமான ரணத் குமாரசிங்க மீது அவதூறு ஏற்படுத்தும் வகையில் செய்திகள் பரப்பப்பட்டு வரப்படுகின்றது. ரணத்குமாரசிங்க சுவிற்சர்லாந்தில் இயங்கும் தமிழர் பேரவையின் அழைப்பை ஏற்றே அங்கு சென்றார்.

அங்கு நடை பெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே சென்றிருந்தார். அவர் சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் அனுமதியுடன் அங்கு சென்றிருந்தார். இதில் ஒளிவு மறைவு ஏதும் இல்லை.

இன்று தமிழ் மக்களின் விடுதலைக்கு ஆதரவாக உலகம் முழுவதும் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. ரணத்குமார சிங்க கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படங்களும் விடுதலைப் புலிகளின் பதாதைகளும் காணப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது.



ஆனால் அவற்றை எடுத்துச் செல்ல சுவிற்சர்லாந்து அரசாங்கமும் அங்குள்ள பொலிஸாரும் தடுக்கவில்லை.

நடைபெறும் கொடிய யுத்தத்திற்கு எதிராக நாம் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறோம். உண்மையில் இந்த நாட்டில் யுத்தத்திற்கு எதிராக எமது அணியே தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஏனைய கட்சிகள் ஏதோ விதத்தில் யுத்தத்திற்கு ஆதரவாகவே செயற்படுகின்றன.

இந்த நாட்டின் வளங்களை எல்லாம் யுத்தத்திற்கு கொட்டி விட்டு இன்று அரசாங்கம் வங்குரோத்து நிலையில் உள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக உலகம் முழுவதும் பலமான எதிர்ப்பு அலைகள் உருவாகி யுள்ளன. அதன் பிரதிபலிப்புகள் இன்று உணரப்படுகின்றன.

உள் நாட்டில் ஜனநாயக சக்திகளை ஒடுக்குகின்ற தமது செயற்பாடுகளை சுதந்திரமாக மேற் கொள்ளலாம் என்றே அரசாங்கம் கருதியது. ஆனால் இன்று சர்வதேசமே இலங்கை அரசுக்கு எதிராக திரளும் நிலை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஓ-5)

## நாட் பாடசாலை வகுப்பு ஆரம்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான நாட் பாடசாலை வகுப்பு இன்று நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(ச-2)

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 28ம் திகதி சனிக்கிழமையும் ஆண்கள், பெண்களிற்கான போட்டியாக நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் ஆண்களிற்கான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க, சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க, சண்டிலிப்பாய் கல்வயல் விநாயகர் வி.க, மாதகல் சிம்பொனி வி.க, நீர்வேலி ஐக்கிய வி.க, அச்சுவேலி ஸ்ரார் வி.க, மட்டுவில் மோகதாஸ் வி.க, அரியாலை ஐக்கிய வி.க, ஆவரங்கால் பாரதி வி.க, புத்தூர் வளர்மதி வி.க ,சங்கானை ஞான வைரவர் வி.க, கே.கே.எஸ் ஐக்கிய வி.க ஆகிய விளையாட்டுக்கழகங்கள் மோதவுள்ளன.

இதே வேளை பெண்களிற்கான நாளைய போட்டியில் கே.கே. எஸ் ஐக்கிய வி.க ,அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க , நீர்லேி ஐக்கிய வி.க, ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க ஆகிய கழகங்கள் மோதவுள்ளன.

(ச-14)

## மாணவர்களின் வரவு ஒழுங்கின்மையை குறைப்பதற்கான நடவடிக்கை

பாடசாலை செல்லாத பிள்ளைகள், இடை விலகிய மாணவர்கள், வரவு ஒழுங்கின்மையான மாணவர்களின் ஆகியோரின் வீதத்தினை குறைப்பதற்கான நடவடிக்கையை மேற் கொள்வதற்காக கட்டாயக் கல்வி வரவுக்குழு அமைத்தல் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியுமான சுற்று நிருபம் யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

(ஓ-7)

## கருத்தரங்கு

யாழ். வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் சித்திரம், சங்கீதம் ஆகிய பாடங்களை கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் சித்திரம் கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்திலும் நடைபெறவுள்ளதென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ஓ-7)

## சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக நடத்திவரும் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளைப் பாதுகாத்தலும் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற் கொள்வதற்கான விழிப்புணர்வும் என்ற ஒருநாள் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை சுழிபுரம், வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சட்டத்தரணி மு.றெமிடியஸ், பிரதேச சபை செயலாளர், சி.புத்திரசிகாமணி செல்வி இ.நாக ரூபிணி ஆகியோர் வளவியலாளர்களாக கலந்து கொள்ளளவுள்ளனர் என பெண்கள் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஓ)

## தேசிய சேமிப்பு வங்கியின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கருத்தரங்கு

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபதியின் வழிகாட்டலுடன் தேசிய சேமிப்பு வங்கியின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கருத்தரங்கு தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் கிளையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கில் விசேடமாக உப அஞ்சலதிபர்களுக்கு , வங்கி அலுவலர்களால் தேசிய சேமிப்பு வங்கியின் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பிரச்சனைகளை எப்படிக் கையாள்வது என்பது பற்றி நடை முறை ரீதியாக கருத்துப் பரிமாற்றங்கள் செய்யப்பட இருப்பதனால் அனைத்து உப அஞ்சலதிபர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகத்திற்கு தவறாது சமூகம் அளிக்குமாறு யாழ்ப்பாண பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

(ஓ-27)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு

### பலம்



வேதாந்தம் பாவத்தை ஒப்புக் கொள்வதில்லை ; பிழையை மட்டும் ஒப்புக் கொள்கிறது; அனைத்திலும் பெரும் பிழை என வேதாந்தம் கூறுவது, “நான் பலமற்றவன், நான் பாவி , இழிந்தவன்” என்றும், “என்னிடம் சக்தி இல்லை, என்னால் இதனைச் செய்ய இயலாது , அதனைச் செய்ய முடியாது” என்றும் சொல்லிக் கொள்வதையே.

கடவுளிடம் நம்பிக்கையற்றவனை நாத்திகன் என்று பண்டைய மதங்கள் கூறின. ஆனால் புதிய மதமோ தன்னிடமே நம்பிக்கை அற்றவனை நாத்திகன் என்கின்றது. பலமே வாழ்வு, பலமின்மையே மரணம். பலமே இன்பம்; நிலையான அழிவற்ற வாழ்வு. பலமின்மையே ஓயா வருத்தமும் துயரமும். பலமின்மை மரணமே. குழந்தைப் பருவம் முதலே ஆக்கமும் பலமும் நன்மையும் தரும் எண்ணம் உங்கள் மூளைக்குள்ளே புகட்டும்.

# யாழ்ப்பாணம்– நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்





**பங்குனித்திங்கள் 9ம் நாள் (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.15 மணிவரை**

விநாயகப் பெருமான் அடியார்களே,

இவ் ஈழமணித்திருநாட்டின் கண் வடபால் சகல சிறப்புக்களும் சைவமும் செந்தமிழும் தழைத்தோங்கி நிற்கும் யாழ்ப்பாணம் நல்லூரில் 17ம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட எட்டு விநாயகர் ஆலயங்களில் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் மிகப் பழமைவாய்ந்த புதுமைமிக்க கோவிலாகும். விருட்சங்களுள் சிறப்பானதும் யாகங்களுக்கு மிக முக்கியத்துவமான "பொரசு" என்று அழைக்கப்படும் பலாச மரங்களால் சூழப் பெற்றதும் தென்கிழக்கே தாமரை, ஆம்பல், நீலோற்பம் முதலிய மலர்கள் நிறைந்த தடாகத்தையும் கிழக்கே செந்நெல் வயல்களையும் கொண்ட அழகிய சூழலில் "வேட்டைக்காரன் வளவு" எனும் பரந்த நிலப் பரப்பிலே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹா சந்திரசேகரப் பிள்ளையாருக்கும் நூதன மூர்த்திகள் மற்றும் புதிதாக மஹாலக்ஷ்மி, சுப்பிரமணியர், சந்தானகோபாலர் ஆகிய தெய்வங்களும் பிரதிஸ்டை செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் செய்ய திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகை தந்து காணுதற்கரிய இப் பெருஞ்சாந்தி பெருவிழாவைக் கண்டு தரிசித்து பெரும்பேறு பெறுவீர்களாக.

**பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நிகழ ஆசீர்வதிக்கும் விப்ர சிரேஷ்டர்கள்**

சிவஸ்ரீ புவன சதாசிவக் குருக்கள்
(காயாரோகணேஸ்வர தேவஸ்தானம் ,திருநெல்வேலி)

"வேதாகம ஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ தானு மஹாதேவக்குருக்கள்
(அதிபர் தர்மஸாஸ்தா குருகுலம், இணுவில்)

**ஆலய பிரதமகுரு**
சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக்குருக்கள்
(ராஜாஜிக் குருக்கள்)

**பிரதிஷ்டா பிரதம குரு**
சிவஸ்ரீ வைரவநாத ஜெகதீஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயக தேவஸ்தானம், திருநெல்வேலி)

**ஆலய குரு**
சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாசக் குருக்கள்

தைலாப்பியங்கம் (பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்) 21.03.2009 சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெறும்)

**திருமுறைப் பாராயணம்**
துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல்,
கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்
அகில இலங்கைத் திருமுறை மன்றம்.

**மங்கள வாத்தியம்**
S.செல்வகுமாரி (திருநெல்வேலி)
M.மணியம் (நல்லூர்) குழுவினர்

**பூமாலை அலங்காரம்**
சண்முகானந்தம் சுந்தரேஸ்வரி
(நல்லூர்)

**ஒலி ஒளி அமைப்பு**
குமார் சவுண்ட்
(நல்லூர்)

கட்டிட நிர்மாணம்
கலாபூஷணம் வி.தம்பிராசா ஆசாரியார் (அராலி)
கலைமாமணி பூஷணம் இ.ஈசுவரன் ஆசாரியார் குழுவினர் (அராலி)

வர்ணவேலை
கலாபூஷணம் கி.சுந்தரலிங்கம் குழுவினர்
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)

**கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.**

இங்ஙனம்

(C/2209)

ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தான
அறங்காவற் குழு, உபகுழு இளைஞர்கள்

நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

## ருபெல்லா தடுப்பூசி வழங்குவதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

ருபெல்லா தடுப்பூசி வழங்கப்பட்ட பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்ததையடுத்து தடுப்பூசி வழங்குவதை இடை நிறுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் தடுப்பூசி வழங்கப்பட்ட பின் சிறுமியின் மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ருபெல்லா தடுப்பூசி வழங்கப்பட்டதையடுத்து ஒவ்வாமை காரணமாக மாத்தறை வைத்தியசாலையில் பல மாணவியர் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுள் 12 வயது மாணவியொருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். அதேவேளை வைத்தியசாலையில் 26 மாணவியர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஓ-5)

## விசேட காரணங்களுக்காக பாராளுமன்றம் 25 ஆம் திகதி கூடும்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து சட்டமூலங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சபை இம் மாதம் 25 ஆம் திகதி மீண்டும் கூடவிருக்கின்றது.

சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூடிய கட்சித்தலைவர்கள் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வருமான வருடம் ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகி 2010 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

அதற்கு முன்னர் வரவு-செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து சட்ட மூலங்களையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாராளுமன்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி கூடவிருக்கின்றது. அன்றைய தினம் ஐந்து சட்டமூலங்களும் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். (ஓ-5)

## கச்சதீவில் சமய வழிபாட்டுத்தலம்

கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானதெனவும் அதனைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனவும் நகர அபிவிருத்தி மற்றும் புனித பிரதேச அபிவிருத்தியமைச்சர் தினேஷ் குணவர்த்தன கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.வாய் மூல வினாவுக்கு விடையளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் கச்ச தீவில் இப்போது சமய வழிபாட்டுத்தல மொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்களும் பொதுமக்களும் அங்கு தினமும் வந்து வழிபாடுகளை நடத்துகின்றனர் என்றும் அவர்களையும் அப் பிரதேசத்தையும் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றும் கூறினார். (ஓ-5)

## நன்றி நவிலல்

அகவை அறுபது எய்தி நான் நீர்வேலிக் கிராமிய வங்கி முகாமையாளர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றவேளை, என்மீது கொண்ட அன்பை வெளிப்படுத்தும் முகமாக நீர்வேலிக் கிராமிய வங்கி வாடிக்கையாளர்களும் நலன் விரும்பிகளும் 25-01-2009 அன்றும், நீர்வேலி பொது அமைப்புகளை உள்ளடக்கிய விழாச் சபையினரால் 15-03-2009 அன்றும் சேவைநலம் பாராட்டுவிழா எடுத்துக் கௌரவிக்கப்பட்டேன்.

இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆசீர்வதித்த அந்தணோத்தமர்களுக்கும், வாழ்த்துரைகள் வழங்கிய எனது ஆசான்களுக்கும், பெரியோர்களுக்கும், பாராட்டுரைகள் நல்கிய பெருந்தகைகளுக்கும் எனது பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு.க.ஆனந்தராஜா அவர்கள் 15.03.2009 இல் இடம்பெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள். அன்னவர்க்கும் எனது பணிவான நன்றி.

இவ்விரு விழாக்களையும் ஏற்பாடு செய்த பெரியோர்கள், கலந்துகொண்ட அன்பர்கள் மற்றும் பல வழிகளில் சிறப்பித்த நல்லுள்ளங்கள், யாவருக்கும் எனதும், என் குடும்பத்தினரதும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச.க. முருகையா
(ஓய்வு பெற்ற கிராமிய வங்கியாளர்)

நீர்வேலி

(C/2211)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### திசைமுகப்படுத்தும் நிகழ்வு (Orientation Programme) -2009

### கலைமுதற்தேர்வு

### கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008

மேற்படி இரு கல்வியாண்டுகளிலும் கலை முதற்தேர்வுக்கு பதிவு செய்த மாணவர்களுக்காக 28.03.2009 தொடக்கம் 09.05.2009 வரை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.30 வரை திசைமுகப்படுத்தும் நிகழ்வொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

மேற்படி நிகழ்வு தொடர்பான நேர அட்டவணையை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்
20.03.2009

(C/2212)

# சச்சின் சதம்; இந்தியா 520 ஓட்டங்கள் குவிப்பு

# இரண்டாவது இன்னிங்ஸிலும் நியூ. தடுமாற்றம்



(ஹமில்டன்)

டெண்டுல்கரின் சிறப்பான சதத்தின் மூலம் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக் களையுமிழந்து 520 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து அணி நேற்றைய மூன் றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 75 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக் களையிழந்து தடுமாறி வருகின்றது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20,5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூ சிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் ஒரு நாள் தொட ரை இந்திய அணி 3:1 என்றகணக் கில் சுவீகரித்தது.

இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி ஹமில்டனில் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைதீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் விக்டோரி 118 ஓட்டங்களையும் ரைடர் 102 ஓட் டங்களையும் எடுத் தனர்.

பந்துவீச்சில் இஷாந் சர்மா 4 விக்கெட்டுக்களையும் பட்டேல் 3 விக்கெட்டுக்களையும் சகீர்ஹான் 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் 2 ஆம் நாள் ஆட்ட நேரமுடிவில் 4 விக் கெட்டுக்களையிழந்து 278 ஓட்டங் களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 3ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய இந்திய அணி டெண்டுல்கர், தோனி, சகீர்கானின் சிறப்பான துடுப் பாட்டத்தின் மூலம் முதலாவது இன் னிங்ஸில் சகலவிக்கெட்டுக் களையு மிழந்து 520 ஓட்டங்களைக் குவித் தது.

இதன் மூலம் இந்திய அணி முத லாவது இன்னிங்ஸில் 241 ஓட்டங் கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

இதில் சச்சின் டெண்டுல்கர் தனது 42 ஆவது டெஸ்ட் சதத்தை கடந்து 260 பந்துகளில் (26 பவுண்டரிகள் உட்பட) 160 ஓட்டங் களையும் காம் பீர் 72, டிராவிட் 66 ஓட்டங்களையும் சகீர்கான் 46 பந்துகளில் (8 பவுண் டரிகள் உட்பட) 51 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 47 ஓட்டங் களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மார்டீன், ஓ பிறின் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை யும் அணித்தலைவர் விக்டோரி 2 விக் கெட்டுக்களையும் மில்ஸ் ஒரு விக் கெட்டையும் கைப் பற்றினர்.

தொடர்ந்து 241 ஓட்டங்கள் பின் னிலையில், இரண்டாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலா ந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக் களையிழந்து 75 ஓட்டங்களை எடுத் திருந்தது.

இதில் குப்தில் 48 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன் பிளைன் ஆட்டமிழக்காமல் 24 ஓட் டங்களை யும் எடுத்தார்.

பந்துவீச்சில் சகீர்கான், முனாப் பட்டேல் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பெண்கள் உலக கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து – நியூசிலாந்து நாளை மோதல்

பெண்கள் உலகக் கிண்ண இறு திப் போட்டியில் இங்கிலாந்து அணி யுடன் விளையாட நியூசிலாந்து அணி தகுதி பெற்றது.

சிட்னியில் நேற்று முன்தினம் நடந்த கடைசி 'சுப்பர் சிக்ஸ்' போட்டி யில் நியூஸி லாந்து அணி பாகிஸ் தானை 223 ஓட்டங்களால் இல குவாக வீழ்த்தியதன் மூலம் அது 3ஆவது தடவையாக இறுதிப் போட் டிக்கு முன்னேறும் வாய்ப் பைப்பெற் றது.

இதன்படி இங்கிலாந்து– நியூஸி லாந்து அணிகளுக்கு இடையி லான பெண்கள் உலக கிண்ணத் தை கைப்பற்றுவதற்கான இறுதிப் போட்டி நாளை சிட்னி ஓவல் மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

இதனிடையே நேற்று முன்தினம் நடந்த தீர்க்கமான போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களுக்கும் 7 விக்கெட் டுக்களை இழந்து 373 ஓட்டங்களைப் பெற்றது. இது பெண்கள் சர்வதேச கிரிக்கெட்டில் பெறப்பட்ட 6 ஆவது அதிக பட்ச ஓட்டங்களாகும். 1997ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுக்களை இழந்து பெற்ற 455 ஓட்டங்களுமே இதன் முத லிடத்தில் காணப்படு கிறது.

இதன்போது நியூசிலாந்து அணி க்காக சுசி பேட்ஸ் 105 பந்துகளில் 168 ஓட்டங்களைப் பெற்றார். இது பெண்கள் ஒருநாள் போட்டியில் வீராங்கனை ஒருவர் பெற்ற இரண் டாவது அதிக பட்ச ஓட்டங்களாகும். அத்துடன் மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஹெய்டி டிப்பன் 128 பந்து களுக்கு 100 ஓட்டங்களைப் குவித் தார்.

இதில் பேட்ஸ், டிப்பன் ஜோடி 2 ஆவது விக்கெட்டுக்காக 262 ஓட் டங்களைப் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

தொடர்ந்து பதிலெ டுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.1 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இதேவேளை, நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றதன் மூலம் நட ப்பு சம்பியன் அவுஸ்திரேலிய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பு நழுவிப்போனது.

எனினும் நேற்று முன்தினம் நடந்த தனது கடைசி 'சுப்பர் சிக்ஸ்' போட்டியில் அவுஸ்தி ரேலிய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறி யுள்ள இங்கிலாந்தை 8 விக்கெட் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தியது.

இதன்மூலம் அவுஸ்திரேலியா உலகக் கிண்ண தொடரின் மூன்றா வது இடத்தைப் பிடிப்பதற்காக இந் தியாவுடன் மோதவுள்ளது. இந்தப் போட்டி இன்று சிட்னி, பான்ங்ஸ் டௌன் ஓவர் மைதானத்தில் நடை பெற வுள்ளது.

இதனிடையே நேற்று முன்தினம் ந டந்த மற்றுமொரு 'சுப்பர்சிக்ஸ்' போட்டியில் இந்திய மகளிர் அணி மேற்கிந்திய தீவுகளை 8 விக்கெட் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தி யமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய 'சுப்பர் சிக்ஸ்' போட்டி முடிவில் புள்ளி பட்டியலில் கடைசி இரண்டு இடங்களையும் பிடித்துள்ள மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணி கள் தொடரில் 5ஆவது இடத்திற் கான போட்டியில் விளையாடவுள் ளன. இந்த ஆட்டம் இன்று சிட்னியில் நடைபெறவுள்ளது.

# இலங்கை வீரர்கள் பங்கேற்க பாதுகாப்பு குறித்து ஆய்வு

இந்தியாவில் பாதுகாப்பு ஏற்பாடு கள் குறித்து ஆய்வு செய்ததன் பின் னரே ஐ.பி.எல் இருபது -20 தொடரு க்கு இலங்கை வீரர்கள் அனுமதிக் கப்படுவார்கள் என இலங்கை கிரிக் கெட் இடைக்கால சபை அறிவித் துள்ளது.

இதற்காக விசேட அதிகாரி ஒரு வரை இந்தி யா அனுப்பி பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யவும் இலங் கை கிரிக்கெட் இடைக்கால சபை தீர்மானித்துள்ளது.

லாஹூரில் நடந்த இலங்கை வீரர்களுக்கு எதிரான தாக்குதலைத் தொடர்ந்தே இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்வரும் வெளி நாட்டு சுற்றுப்பயணங் களின் போது பாதுகாப்புக்குறித்து ஆய்வு நடத்தப்படுமென்று இடைக்கால சபையின் செயலாளர் நிசாந்த ரணதுங்க தெரிவித்தார். (5)

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (39)





டெஸ்ட் அரங்கில் தனது 20 ஆவது போட்டியிலேயே முரளிதரன் ஆட்டநாயகன் விருதை வென்றார். இரண் டாவது போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இலங்கை அணி தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் 1995ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் திகதி சியால்கொட்டில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையு மிழந்து 232 ஓட்டங்களை எடுத்தது.


இதில் முரளிதரன் 7 பந்துகளில் ஒரு பவுண்டரியை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து முதலாவது இன் னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 214 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையு மிழந்தது.

இதில் முரளிதரன் 27.1 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 72 ஓட்டங்களைக் கொடுத்து சொகைப் மொகமெட் (8), அணித்தலைவர் ரமீஸ் ராஜா (26), பசீட் அலி (4) மற்றும் மொகமெட் அக்ரம் (5) ஆகி யோரை வெளியேற்றி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி நம் பிக்கையளித்தார்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 1 பாலா கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 338 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களையிழந்து ஆட்டத்தை இடை நிறுத்தி பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக்காக 357 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காத போதும் தனது ஓட்ட கணக்கையும் ஆரம்பிக்கவில்லை. இரண்டாவது இன் னிங்ஸில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 212 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட் டுக்களையுமிழந்தது. இதன்மூலம் இலங்கை அணி மூன் றாவது டெஸ்டில் 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொட ரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி பாகிஸ் தான் மண்ணில் சாதித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் முரளி தரன் 17 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 53 ஓட்டங்களைக் கொடுத்த போதிலும் விக்கெட் வீழ்த்தத் தவறினார். (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-44



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல் லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள் ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படு த்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

## நேற்றைய பகுதிக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | | 9 | 5 | 8 | | 1 | 7 |
| 1 | 3 | | 7 | 1 | 3 | | 6 | 9 |
| 4 | 2 | 9 | 1 | | 1 | 5 | 2 | 3 |
| 2 | 1 | 3 | | 7 | 5 | 9 | 3 | 8 |
| | | | 1 | 4 | 2 | | | |
| 8 | 1 | 3 | 7 | 9 | | 7 | 8 | 9 |
| 7 | 3 | 8 | 9 | | 4 | 1 | 6 | 8 |
| 9 | 8 | | 8 | 4 | 9 | | 9 | 7 |
| 5 | 2 | | 5 | 1 | 2 | | 1 | 2 |

## உள்நாட்டு விவகாரம்...

ஒரு உள்நாட்டு யுத்தம் என்ற போர்வையில் பரப்புரைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார் என செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இரண்டாவது தடவையாக எடுத்துக் கொள்ளப்பட இருந்த இவ் விவாதத்தை உள்நாட்டுப் பிரச்சினை என சீனா வர்ணித்திருப்பதனால் இவ் விவாதம் தடைப்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சீனாவிடம் விடுத்த கோரிக்கையை தொடர்ந்தே சீனா, இலங்கை அரசிற்கு சார்பாக நடந்து கொள்வதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் இந்நிலை தொடர்பில் சீன அதிகாரிகளுக்கு விளக்க விருப்பமுடையவர்களாக உள்ளதாகவும், சீனாவிடம் ஐ.நாவில் தமிழ் மக்களின் நிலை தொடர்பில் விவாதிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

இலங்கையில் தொடரும் மோதல்களால் உயிரிழப்புக்கள் அதிகரித்திருக்கும் நிலையில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடுவதற்கு எடுத்த முயற்சிகள் சீனாவின் எதிர்ப்பால் தடுக்கப்பட்டன.

மோதல்கள் காரணமாக இந்த வருடம் ஜனவரி 20ஆம் திகதி முதல் மார்ச் 7ஆம் திகதிவரை இலங்கையில் 2 ஆயிரத்து 683 பேர் கொல்லப்பட்டிருப்பதால், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விடயம் குறித்துக் கலந்துரையாடுவது பற்றி எதுவும் குறிப்பிடப்படாதபோதும், வேறு விடயங்கள் என்ற தலைப்பின் கீழ் இலங்கை பற்றி கலந்துரையாடப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றிருக்காத நாடுகளான அவுஸ்திரியா, மெக்சிக்கோ, கொஸ்டா ரிக்கா உட்பட ஏனைய நாடுகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தன. (ச-5)

## கரு ஜெயசூரிய...

தெரியவருகிறது.

ஐ.தே.கவின் தலைமைத்துவம் தொடர்பில் கட்சிக்குள்நெருக்கடிகள் எழுந்திருக்கும் நிலையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நெருக்கடிகள் குறித்து ஆராய கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

கட்சியினுள் தோன்றியிருக்கும் நெருக்கடிகளை தீர்க்கும் வகையிலான யாப்பு மாற்றம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. (ச-5)

## இந்து அமைப்புகளின் முக்கிய கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ் குடாநாட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவும் வகையில் இந்து அமைப்புக்களின் ஒன்றியம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இந்து ஆலய நிர்வாகிகள், இந்து சமய அமைப்புக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு இந்து அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ந)

## அரசியல் யோசனையை...

அவர் கோரியுள்ளார். பொது மக்களின் சுதந்திரத்தை தடுப்பதற்கு எவ்வித நியாயங்களையும் தெரிவிக்க முடியாது.

புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் இலங்கையில் மேலும் இழப்புக்களை தவிர்க்க வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு அவுஸ்திரேலிய அரசாங்கம் அவர்களை தெளிவுபடுத்தி வருகிறது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கையில் சிறுபான்மை மக்களுக்காக எவ்வித தாமதமும் இன்றி ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் மீளாக்கம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த அரசியல் தீர்வானது இலங்கையர்கள் அனைவரினதும் அபிலாசைகளையும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் திடகாத்திரமான சூழ் நிலையையும் அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்றும் ஸ்டிபன் ஸ்மித் வலியுறுத்தியுள்ளார்.

மோதல்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளில் பொதுமக்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பொறுப்பாகும் என ஸ்டிபன் ஸ்மித் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)

## பதுளையில்...

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட 20 இளைஞர்களில் ஒன்பது பேர் சுகாதார பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஸ், பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டதையடுத்து விடுதலை செய்யப்பட்டனர். (ச-5)

## சி.சு.க. அலு...

மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (எ-1)

## இலங்கை அரசுக்கு...

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் வெளியில் கசிந்துள்ளன என்று இன்னர் சிற்றி (Inner City Press) தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரி ஜோன் கோம்ஸ் மற்றும் ஐ.நாவின் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர்கள் போன்றோர் தம்மிடம் வன்னியில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் இல்லை என தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால் அவர்களின் நடவடிக்கை டாபர் மற்றும் காசா பகுதிகளில் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இருந்து வேறுபட்டதாகவே உள்ளது. அதாவது இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றுவதற்கு அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

வன்னிப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கடந்த ஜனவரி 20ம் திகதியில் இருந்து மார்ச் 7ம் திகதி வரையில் 2 ஆயிரத்து 683 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 7 ஆயிரத்து 241 பேர் படுகாயமடைந்துள்ளதான தகவல்கள் ஐ.நாவிடம் உள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மைக்கேல் மொன்டாசிடம் எமது அமைப்பு வன்னியில் உயிரிழந்த மக்கள் தொடர்பாக கடந்த பெப்ரவரி 17 ஆம் திகதி வினவியிருந்தது. ஆனால் அதற்கு அவர் நாம் மக்களைக் காப்பாற்ற முயற்சிக்கின்றோம் உடல்களைக் கணக்கிடவில்லை என தெரிவித்தார்.

வன்னியில் தங்கியுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்பாக ஐ.நா. உண்மையான தகவல்களைக் கொண்டுள்ளது.

ஐ.நா.வின் தகவல்களின் பிரகாரம் அங்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பேர் வரை தங்கியுள்ளனர். ஆனால் அங்கு 70ஆயிரம் பேர் தங்கியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்த தகவல்களையே ஐ.நா. கூறிவருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புத்தாண்டுக்கு முன்னர் புலிகளை...

விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதன் மூலம், அடுத்த தேர்தலில் தாம் வெற்றி பெற முடியும் என காங்கிரஸ் கட்சி திடமாக நம்புவதால் இந்தக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு தமிழ்நாட்டில் ஆட்சியிலுள்ள தி.மு.க. கட்சி உடந்தையாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய இணையத்தளம் ஒன்றில் வெளியான செய்தி வருமாறு,"

தமிழ்நாட்டின் மற்றொரு பிரதான கட்சியான ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க., இடதுசாரி மற்றும் பொதுவுடமைக் கட்சிகளுடன் நெருங்கிய உறவைப்பேண ஆரம்பித்திருப்பதாலும் ஈழ ஆதரவுக் கட்சிகளும் இந்தக் கூட்டணியில் இணைந்து கொள்ளலாம் என்பதாலும் காங்கிரசுடன் இணைந்திருப்பதே தமக்குத் தேர்தல் வெற்றியை ஈட்டித்தரும் என எண்ணும் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க., ஈழத்தில்தமிழினப் படுகொலையைக் கண்டுகொள்ளாமல் இருப்பதாக தமிழ்நாட்டிலுள்ள தமிழின உணர்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியக்கொள்கை வகுப்பாளர்களும் இந்தியப் புலனாய்வுத் துறையினரும் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட வேண்டுமென கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதற்கு உடந்தையாக இருப்பதன் மூலம் அடுத்த தடவையும் ஆட்சியைத் தக்க வைக்க முடியும் எனவும் சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி எண்ணுகிறது.

இதனாலேயே தமிழ் நாட்டில் ஈழ விடுதலை ஆதரவுப் போராட்டங்கள் நடைபெறும் போது, அதனை திசை திருப்பும் வகையில் தமிழ் நாட்டின் ஆளும் கட்சி மற்றொரு ஆதரவுப் போராட்ட நாடகத்தை அரங்கேற்றுவதாகவும் ஈழத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்படுகின்ற போதிலும் கலைஞர் கருணாநிதி தலைமையிலான அரசு ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் இது வரை எடுக்க வில்லை எனவும் குற்றம் சாட்டப்படுகிறது.

கடந்த மாதம் 20ம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நெதர்லாந்தின் தலைநகர் அம்ஸ்ரடாமில் நடைபெற்ற உலகின் தொழிற் கட்சி மற்றும் இடதுசாரிகளின் நான்காம் மண்டல மாநாட்டின் போது ஊடகவியலாளர் மத்தியிலும் பின்னர் நெதர்லாந்தின் முன்னணி வானொலிச் சேவை ஒன்றிற்கும் கருத்துரைத்த இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, ஈழத் தமிழ் மக்கள் மீது தற்போதைய போர் முற்றாகவும் நேரடியாகவும் இந்திய அரசினால் முன்னெடுக்கப்படுவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார்.

கடந்த 17ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் கருத்துரைத்திருந்த முக்கிய அமைச்சர்களுள் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வா விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமது போரில் இந்தியா முக்கிய பங்கு வகித்து வருவதாகவும் இந்தியாவுக்கு சிங்கள மக்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என பகிரங்கமாக கூறியிருந்தார்.

அண்மையில் சிங்கள ஊடகமொன்றிற்கு கருத்துரைத்திருந்த படைகளின் முக்கிய தளபதி ஒருவர் கிளிநொச்சியைக் கைப்பற்றிய பின்னரும் அதற்கு முன்னரும் இந்தியாவே வன்னியில் போரை முன்னெடுப்பதாகவும் தமது படைகள் பெயரளவிலேயே அங்கு பணிகளில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா முப்படைத்தளம் மீது 2008ம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் நாள் வான் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது அங்கு ராடர்கருவிகளை இயக்கிவந்த இரண்டு இந்தியப் படையினர் காயமடைந்த தகவல் வெளியுலகிற்குக் கசிந்திருந்தது.

இதன் பின்னர் இலங்கை படைகளுக்கான இந்தியப் படைத்துறை உதவிகள் மிக இரகசியமாக வழங்கப்பட்டு வருவதாகக் கருதப்படும் நிலையில் வன்னி களமுனைகளில் இந்தியப் படைகளும் அதன் தளபதிகளும் இருப்பதாகவும் ஏற்கனவே தகவல்கள் கசிந்திருந்தன.

இவற்றை மூடி மறைப்பதற்காகவும் வேறு சில படைத்துறைக் காரணங்களுக்காகவுமே வன்னியில் காயமடைந்த மக்கள் விடுதலைப் புலிகளின் நிருவாகத்திலும் ஏனைய சிலர் திருகோணமலை நகருக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும் திருகோணமலை-முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லையிலுள்ள புல்மோட்டைக்கு இந்திய படைத்துறை மருத்துவர்கள் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-1)

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
CIMA
Certificate Level Sat,Sun 7.30.AM
Managerial Level 22.03.2009 Sun 1.PM
விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

மீண்டும் விற்பனைக்கு
எம்மிடம் தரமான கொங்கிறீற் வேலித் தூண்கள், கொங்கிறீற் அலங்காரத் தூண்கள் மற்றும் அனைத்து வகையான கொங்கிறீற் உற்பத்திகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
இல. 17, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கெங்காதரன் வைத்தியசாலை அருகில்)
T.P. - 0771277113 (2406)

உடன் தேவை
* ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள்
* பயிலுநர்கள்
யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள தகுதியுடையவர்கள் நேரில் வரவும்.
இல.03, 02 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
நிர்வாக உத்தியோகத்தர் வலம்புரி

Microsoft Certified Systems Engineer
* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 23.03.2009 08.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில் MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

LAVA HOSPITAL
75, Temple Road, Jaffna. ( ICRC சந்தி அருகாமையில்)
T.P. - 021222 4333
*சத்திர சிகிச்சை நிபுணர்
→தினமும் காலை 7.00 மணி
*பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர்கள்
→வியாழன் பி.ப. 4.00 மணி
→திங்கள் பி.ப. 1.00 மணி
*பொது வைத்திய நிபுணர்கள்
→வியாழன் பி.ப. 4.00 மணி
→சனி பி.ப. 4.00 மணி
*SCAN, ECG வசதிகள்
(C-2213)

ANVIL
The seat of formal English
(2413)
Arasady Amman Veethy, Thirunelvely North.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.